உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

புள்ளிருக்குவேளூர்

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

குமரகுருபர சுவாமிகள்

அருளிச்செய்தது.

வைத்தீசுரன்கோயில்

ச. சோமசுந்தர தேசிகரால்

சென்னை

சாது அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1929.

திருப்பனந்தாள்

ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள்.

தருமபுரம் ஆதீனம்
NOV 9 1936
DHARMAPURAM ADHINAM

பல்கலைக்கழக ... அவ்வை தி.க. சண்முகம் நூலகம் ... தமிழியல் துறை

திருச்சிற்றம்பலம்

முருகன்துணை.

புள்ளிருக்குவேளூர்

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

முத்தபிள்ளையார் ஏத்தேடுப்பு.

1. பொன்பூத்த குடுமிப் பொலங்குவட் டிமவான்
பொருப்பிற் பிறந்துதவளப்
பொழிநிலவு தவழுமுழு வெள்ளிவே தண்டத்தொர்
போர்க்களிற் றைப்புணர்ந்து

தேன்பூத்த பாட்டளி துதைந்தபைங் கூந்தற்
செழும்பிடி பயந்தளித்த
சிறுகட் பெருஞ்செவிக் குஞ்சரக் கன்றினிரு
செஞ்சரணை யஞ்சலிப்பாம்

மின்பூத்த சிற்றிடைப் பேரமர்க் கட்கடவுள்
வேழங் கடம்படுபடா
வெம்முலைக் கோடுகொண் டுழுதுழு தழக்கமுகை
விண்டுதண் டேன்றுளிக்குங்

கோன்பூத்த தெரியற் கடம்பணி தடம்புயக்
குரிசிலைப் பொருசிலைக்கைக்
குமரனைக் கந்தபுரி முருகனைப் பரவுமென்
கொழிதமிழ்க் கவிதழையவே.

க. காப்புப்பருவம்

திருமால்

2. பூமேவு சற்பகப் பொங்கரிற் செங்கட்
புலோமசை வளர்த்தகும்பப்
புணர்முலைக் களியானை விளையாடு பன்னிரு
பொருப்பனை விருப்பனைத்துங்

கோமேவு சாரற் குறச்சிறுமி மேல்வைத்த
குழகனைக் கழகந்தொறுங்
கொத்துமுத் தமிழ்மொய்த்த கந்தபுரி முத்துக்
குமாரனைத் தனிபுரக்க

தேமேவு கடவுட் பொலங்கிரி திசைக்கரிக
டிகிரிகிரி குலகிரியொடுந்
திரியத் திரித்துமத் தெறியத் தடங்கடற்
றெண்டிரை முகட்டுதித்த

பாமேவு மதுரம் பழுத்தமுத மொழுகும்
பசுங்குதலை மழலையஞ்சொற்
பங்கயச் செல்வியிரு கொங்கைக் குவட்டுவளர்
பச்சைப் பசுங்கொண்டலே. க

வைத்தியநாதர்

வேறு

3. ஒருபுறத்துமா கதமிமைப்ப வொளிர்
மாமேருமற்றொரு மேருவைச்சாய்த்தென
உலகளக்கநிமிர் வடபொருப்பையொரு
தோளால்வளைத்தபி ஞகியைத்தீக்கண
லுமிழுமுக்குடுமி யயிறிரித்துவரு
வாய்வாண்மழுப்படை வீரனைப்பார்த்தனோ
டுடலுமற்றொருழிலி னறவிளைத்துமெதி
ரோடாதுடற்றுகி ராதனைக்கூக்குரல்

விரிகடற்புடவி முழுதுணச்சமையு
மோர்காளைகட்டுப்ர தாபனைக்கார்க்கடு
விடமெடுத்தரிய திருமிடற்றிலிடு
காமாரியைக்கவு மாரியைப்போற்றிரு
விழிமுனிற்கும்வடி வழகுடைக்கடவுண்
மாமோகினிக்கும ணாளனைச்சூக்கும
வெளியினிற்பரம நடநவிற்றுதிறல்
வேளூர்வயித்திய நாதனைப்போற்றுதுங்

தூரவுசெச்சையொடு நறவுயிர்ப்பவிரி
தேனுறுவட்டெழு மார்பனைப்பேய்த்திரள்
குரவையிட்டவுணர் தடிசுவைத்திடவொர்
கூர்வேல்விடுத்தகு மாரனைப்பார்ப்பதி
குமரனைச்சமரி லுருமுகக்குளிறு
காலாயுதக்கொடி யாளனைக்கோட்டிய
குறுநகைக்குமன முருகவெற்பவர்த
மானேடுமெற்பொரு தோளனைத்தாக்கிய

திரண்மருப்பினமர் பொருதனிக்கடவுண்
மால்யானையைப்புணர் காளையைச்சாற்றிய
செழுமறைப்பொருளி னுரைவிரித்துமெனும்
வேதாமுடித்தலை மோதுகைக்காய்ப்பொடு
திருவடித்துணையின் முடிபதித்தவடு
வாருதமெய்ப்புக ழாளியைப்பூட்டிய
சிறைவிடுத்தமரர் குறைமுடித்துதவு
சேனாபதிப்பெரு மாடனைக்காக்கவே. உ

தையனாயகி

வேறு

4. குழையடர்ந்துவடி கணைதுரந்துசெறி
குமிழ்மறிந்தவிழி நவ்வியைக்கோட்டொடு
குவடெறிந்தமுத கலசம்வென்றதட
முலைசுமந்தமலை வல்லியைச்சேற்றளிர்

குமுதம்விண்டசுவை யமுதமுண்டினிய
கொழுநர்கொஞ்சுசிறு கிள்ளையைத்தாட்டுணைக்
குறுகுதொண்டர்பிழை யறமறந்துபிறர்
குணமிகழ்ந்ததக வில்லியைச்சேட்செலு

மேழுபெரும்புவன முழுதொருங்குதவு
மிறைவியென்றுமறை கையெடுத்தார்க்கவு
மிடைநுடங்குமட நடையிளங்குமரி
யெனவிருந்தகன கள்வியைப்பூத்தவென்
னிதயபுண்டரிக மலரிலெந்தையொடு
மினிதமர்ந்தவொரு செல்வியைப்பாற்றொருகு
மிருவர்கண்கள்கது வரியசெஞ்சுடரி
னிடமருங்குடைய தையலைப்போற்றுது

முழுதுணர்ந்துமுணர் வரியதொன்றையொரு
மொழியின்விண்டசிறு பிள்ளையைச்சூர்ப்பெயர்
முதுபழம்பகையை யறவெறிந்தவுணர்
முதறடிந்ததனி வில்லியைப்பாட்டளி
முரலவிண்டதரு நிழறொழும்புகுடி
புகவழங்குகொடை வள்ளலைப்போற்றடி
முடியுமின்றிவெறு வெளிகடந்துமறை
முடிவினின்றுநிறை செல்வனைக்காத்தொறு

மழலைவண்டுதட மலர்குடைந்துபுது
மதுவருந்திநறு மல்லிகைச்சேக்கையின்
வடிபசுந்தமிழி னிசைபயின்றபெடை
யொடுதுயின்றினிய செவ்வழிப்பாட்டினை
வருவிபஞ்சிபயி றருமதங்கர்தெரு
மாமுரான்றுநெடு வைகறைப்போய்ச்செழு
மலரிலஞ்சிதொறு முலவுகந்தபுரி
மருவுகந்தனையெம் மையனைக்காக்கவே. ரு

கற்பக விநாயகர்

வேறு

5. கடாமுமிழ் கைக்கதக் கிம்புரிக் கோட்டொரு
காராசல மிட்டமெய்க் கஞ்சுகிக் கேற்பவொர்
படாமணி மத்தகத் தந்தியைத் தீர்த்தர்கள்
பாராவரு கற்பகக் கன்றினைப் போற்றுதும்
வடாதுபொ ருப்பினிற் றுன்றுபுத் தேட்கெதிர்
மனோலய முற்றமெய்ப் பண்பினைக் காட்டிய
சடானன னைத்தலைச் சங்கமவைத் தாற்றிய
சடாயுபு ரத்தருட் கந்தனைக் காக்கவே. ச

பிரமா

வேறு

6. பைங்காய்க் கமுகு செம்பழுக்காய்ப்
பவள முதிர்ப்பக் கதிர்ச்செந்நெல்
பனிமுத் துகுக்குஞ் சோணாட்டின்
பரிசு பாடி ஞிமிறிரப்பக்
கோங்கார்த் திறைக்கு நறைக்காந்தள்
குறிஞ்சி மலரோ டணிந்தநறுங்
குஞ்சிப் பெருமாள் வேதபுரி
குமரப் பெருமா டனைக்காக்க
செங்காற் கருங்கட் பைந்தொடியார்
சிற்றூய்ப் பாடிப் பெருங்குடியிற்
றீம்பா றிருடிக் கட்டுண்டு
திரியா வண்ணந் திருத்தாதைக்
கங்காப் பட்டங்கப் பாறயிர்நெ
யருந்தேன் கடலோ டிருந்துண்ண
வகிலம் படைத்துத் தனக்கேற
வன்னம் படைத்த பெருமாளே. ரு

தே வே ந் தி ர ன்

வேறு

7. கானாறு கற்பகக் காவுமூ வுலகுமக்
காவென நிழற்று மொற்றைக்
கவிகையுங் குணதிசைக் காவலும் பிறவுமுள
காணியுங் காணியாக

வானாறு கோட்டிமய மலைவயிறு வாய்த்ததலை
மகளுக்கு மணமகற்கு
மருமகளை யுரியதன் திருமக ளெனப்பெற்ற
மா[illegible]டி களைத் துதிப்பாம்

பானாறு செந்நெற் பசுங்கதிர் கறித்துமென்
பைங்குவளை வாய்குதட்டும்
பணைமருப் பெருமைமடு மடிமடை திறந்ததீம்
பாலாறு பங்கயச்செந்

தேனாறு டன்கடவுள் வானா றெனப்பெருகு
சித்தாமிர் தஞ்சிவபிரான்
சீர்த்திப்ர தாபநிகர் தினகா புரித்தேவ
தேவனைக் காக்கவென்றே. சு

தி ரு ம க ள்

வேறு

8. மானிறக் கடவுடிரு மறுமார்பி னறவிரி
வனத்துழாய்க் காடுமூடி
மாயிருள் வழங்குதன் திருமாளி கைக்கந்தண்
மணிவிளக் கிட்டுமுட்டாட்

கானிறைக் குங்கமல வீட்டுக்கு நெட்டிதழ்க்
கதவந் திறந்தளித்துங்
காதன்மை காட்டுங் கவுத்துவத் துடன்வந்த
கன்னிகையை யஞ்சலிப்பா

மீனிறப் புணரியை விழுங்குங் கடற்றானை
வெள்ளமொடு கள்ளமனமு
மெய்யுமிரு ளத்திரளு மவுணக் கருங்கங்குல்
விடியக் கடுங்குரல்விடுந்

தீநிறக் குடுமிவெண் சேவலை யுயர்த்துவண்
சிறைமயிற் பரிநடாத்துஞ்
சேவகப் பெருமானை வேதபுரி வருமிளஞ்
சேயைப் புரக்கவென்றே. எ

கலைமகள்

9. துறைபட்ட மறையவன் செந்நாப் படிந்துதன்
சுதைநிறஞ் சிதைவுறுமே
தொன்மறை கனிந்தூறு மன்பனீ ரூறலிற்
றூத்துகி னனைப்புறுமே

நறைபட்ட வெண்டோட்டு நளினப் பொகுட்டெமது
நன்னெஞ் செனக்குடிபுகு
ஞானப் பிராட்டியைச் சொற்கடற் றெள்ளமுதை
நாத்தழும் பத்துதிப்பாஞ்

சிறைபட்ட தண்டுறைச் சித்தாமிர் தப்பெருந்
தீர்த்தந் திளைத்தாடிய
செஞ்சுடர்க் கடவுளும் வெண்சுடர்க் கடவுளிற்
றெள்ளமுத மயமாகலா

னுறைபட்ட சுதைநிலவொ டிளவெயிலு மளவளா
யுண்ணச் சகோரம்வெஃகு
மோங்கெயிற் பரிதிபுரி முருகனைச் சண்முகத்
தொருவனைக் காக்கவென்றே. அ

சத்தமாதர்

வேறு

10. பயிறரு முதுமறை நூலைத் தெரித்தவள்
பகைதொகு புரமெரி மூளச் சிரித்தவள்
பனிவரை பகநெடு வேலைப் பணித்தவள்
படுகடல் புகையெழ வார்விற் குனித்தவ

ளெயிறுகொ டுழுதெழு பாரைப் பெயர்த்தவ
ளெறிதரு குலிசம்வி டாமற் றரித்தவ
ளிடுபலி கொளுமொர்க பாலக் கரத்தின
ளெனுமிவ ரெழுவர்க டாளைப் பழிச்சுதுங்

கயறிரி சரவண வாவிக் கரைக்குரை
கழலொடு பரிபுர மோலிட் டிடக்கட
களிறொடு களிறெதிர் மோதத் திசைத்திசை
கடுநடை யுளதக ரேறச் சமர்த்தனை

முயறரு கறையொடு தேய்வுற் றிளைத்தொரு
முழுமதி குறைமதி யாகத் துகிற்கொடி
முகிலொடு தடமதில் வேதப் பதித்தனி
முதல்வனை யறுமுக வேளைப் புரக்கவே. ௯

முப்பத்துமுக்கோடி தேவர்கள்

வேறு

11. மூறுக்குடை நறைச்சத தளத்திரு மலர்த்தவிசு
சொர்க்கத் தலத்தோடு சேடசய னத்தையு
முடித்தலை யடித்தலை பதித்தெதிர் துதித்தவர்த
மக்குக் கொடுத்தானை மாதிரமொ ரெட்டையு

மிறைப்பொழு தினிற்பொடி படுத்தருள் கொடுக்வல
சத்திக் கரத்தானை யூதியமெ னத்தனை
யிருப்பினு நடப்பினு நினைப்பவ ரிருக்கவெமர்
சித்தத் திருப்பானை யாறிரு புயத்தனை

வெறுப்பொடு விருப்பினை யறுத்தவ ருளத்துமலர்
பத்மப் பதத்தானை வேதபுரி யிற்சின
விடைக்கொடி வலத்தினு மடக்கொடி யிடத்துமுள
முக்கட் டிருத்தாதை யார்பணி குருக்களை

மறைக்கிழ வனைத்தலை புடைத்துல கனைத்தினையு
மொக்கப் படைத்தானை மூவிரு முகத்தனை
மருத்துவர் வசுக்கதி ருருத்திர ரெனப்பொலியு
முப்பத்து முக்கோடி தேவர்கள் புரக்கவே. ௧௦

௨. செங்கீரைப்பருவம்

12. இருக்கோ விடும்பரி புரக்கோல முந்நுதலி
விட்டபொட் டுஞ்சுட்டியு
மெரிமணிப் பட்டமுங் கட்டுபொன் னரைஞாணு
மிளஞாயி றுதயஞ்செயு
முருக்கோல முஞ்சூழி யக்கொண்டை யும்முச்சி
யுச்சியும் வாளிமுத்து
மொள்ளொளி ததும்புங் குதம்பையுங் கண்டுகண்
டோடரிக் கண்களிக்கு
மருக்கோல நீலக் குழற்றைய லாட்கரு
மருந்தா யிருந்ததெய்வ
மகக்கோல மேமுதிர் கிழக்கோல மாய்க்குற
மடந்தைமு னடந்துமற்றத்
திருக்கோல முடனொரு மணக்கோல மானவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. க

13. கும்பாதி காரிய மெனத்தமை நிமித்தமாக்
கொண்டவகி லாண்டங்களின்
குழுவுக்கு மற்றுத்த மிருவர்குறி யுந்தலைக்
கூடினுந் தான்றனக்கச்
சோம்பாதி யன்மைக் கனைத்துந்தன் மயமெனுஞ்
சுருதிகரி யாவைத்துமச்
சுருதிக்கு மெரிசுடர்ப் பரிதிக்கு மிரவிகுல
தோன்றற்கு மிளவலுக்குஞ்
சம்பாதி யொடுநற் சடாயுவுக் கும்பெருந்
தவமுனிவ ரெழுவ ருக்குந்
தண்ணளி சுரந்திட்ட தீராத வினைதீர்த்த
தம்பிரான் றிருமேனியிற்

சேம்பாதி யுங்கொண்ட னையனு யகிகுமர
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. ௨

14\. கைக்கெட்டு மெட்டுக் களிற்றைப் பிடித்தக்
களிற்றோடு முட்டவிட்டுக்
ககனவட் டத்தினொடு பரிதிவட் டத்தைவளை
திகிரிவட் டத்திவிட்டு

மூக்கட் டிருத்தாதை கோதண்ட மெனவைத்த
வேதண்ட மாதண்டமா
மூதண்ட கூடந்த்ரி கூடத் தொடுஞ்சாடி
மூரிக் கடாசலமவன்

மெய்க்கிட்ட சட்டைக்கு நேரிட் டிடப்பட்ட
மேகபட லத்துமொண்டு
மேல்கட லினைப்பெருங் கீழ்கடல் புகப்பெய்து
விளையாட்டு வீரர்களொடுந்

திக்கெட்டும் விளையாடு சேனா பதிக்கடவுள்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. ௩

15\. மைவிழிச் செங்கமல வல்லிக்கு நேமியான்
மணிமார்பு வாணிக்குநான்
மறைமுதலி செந்நாத் தடந்தைய லாளொடும்
வயித்தியக் கடவுளார்க்கு

மெய்விரிக் குந்தொண்ட ருள்ளத் தடத்தினொடு
வேதச் சிரங்கடுப்ப
வேதபுரி கந்தபுரி புள்ளூ ரெனப்பொலியும்
வேளூர திசைதிசைதொறுங்

கைவகுத் தரமகளிர் குரவையாட் டயர்பெருங்
கயிலைத் தடஞ்சாரலும்
கனகாச லத்தும்வள ரிமயா சலத்துமுயர்
கந்தமா தனவெற்பெனத்

தெய்வதப் பிடியோடும் விளையாடு மழகளிறு
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. ச

16. மீனேறு குண்டகழி தீவாய் மடுத்ததனி
வில்லியா ரிளவலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கு

மானே றுயர்த்திட்ட வையற்கு மம்மைக்கு
மருமருந் தாகிநின்ற
வாதிப் பிரானென்று மும்முதற் கடவுளு
மடித்தொழும் பாற்றமற்றக்

கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந் தவடொண்டைவாய்த்

தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள
செங்கீரை யாடியருளே. ரு

வேறு

17. செம்பொ னடிச்சிறு கிண்கிணி யோடு
சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி
திகழரை வடமாடப்

பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு
பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச்
சுட்டி பதிந்தாடக்

கம்பி விதம்பொதி குண்டல முங்குழை
காது மசைந்தாடக்
கட்டிய சூழியு முச்சியு முச்சிக்
கதிர்முத் தொடுமாட

அம்பவ ளத்திரு மேனியு மாடிட
வாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக
னாடுக செங்கீரை.

18. குழையொடு குழையெதிர் மோதிக் காதணி
குண்டலம் வெயில்வீசக்
குமுத விதழ்க்கனி வாயமு தூறிய
குறுநகை நிலவூர

முழுவயி ரப்புய வலயமு முன்கை
முதாரியு மொளிகால
முத்த மரும்பி யெனக்குறு வேர்வு
முகத்தி லரும்பியிடப்

புழுதி யளைந்த பசுந்திரு மேனிப்
பொங்கொளி பொங்கியெழப்
புண்டரி கங்கண் மலர்ந்த விழிக்கடை
பொழியருள் கரைபுரள

அழகு கனிந்து முதிர்ந்த விளங்கனி
யாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக
னாடுக செங்கீரை.

19. விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய
மெல்லிதழ் புலராமே
விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன்
மென்குரல் கம்மாமே

கரைவுறு மஞ்சன நண்டுளி சிந்திக்
கண்மலர் சிவவாமே
கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல்
கருவடி வுண்ணுமே

யுருவ மணிச்சிறு தொட்டி லுதைந்துநி
ன்னுண்பத நோவாமே
யொருதா ளூந்தி யெழுந்திரு கையு
மொருங்கு பதித்துநிமிர்ந்

தருள்பொழி திருமுக மசைய வசைந்தினி
தாடுக செங்கீரை
ஆதி வயித்திய நாத புரிக்குக
னாடுக செங்கீரை. அ

வேறு

20. கும்ப மதக்களி யானை யிரண்டே யொன்றேமைக்
கொண்டல் விழிக்கயன் மீனு மிரண்டே கொண்டேகிச்

சம்ப ரனைப்பொரு சேவகன் வந்தான் வந்தான்முற்
சண்டை கொளற்கென நேர்வரு பெண்பா லன்பாயே

யம்ப வளக்கொடி யேவளர் கொம்பே யென்றேநீ
யன்று புனத்துயிர் சோர்வது கண்டே முன்போதுங்

கம்ப மதத்தர் சகோதர செங்கோ செங்கீரை
கந்த புரிக்கரு ணாநிதி செங்கோ செங்கீரை. கூ

21. திங்க ளுதற்றிரு மாதொடு நின்றே மன்றாடுஞ்
செங்கண் விடைக்கொடி யோனருள் கன்றே யொன்றேயா

யெங்க ளுளத்தமு தூறு கரும்பே யன்பாளர்க்
கின்ப மளிக்குமெய்ஞ் ஞான மருந்தே யெந்தாயின்

கோங்கலர் மைக்குழல் வாழ்பொறி வண்டே வண்டேதுங்
கொந்தள கக்குற மான்வளர் குன்றே யென்றோதுங்

கங்கை மகட்கொரு கான்முளை செங்கோ செங்கீரை
கந்த புரிக்கரு ணாநிதி செங்கோ செங்கீரை. க0

௩. தாலப்பருவம்

22. பில்கும் பசுந்தே னசும்பிருந்த
பின்ரு ழளகத் தாமகளிர்
பேதைக் குறும்பு விளையாடும்
போரா யத்துச் சிறுமருங்குற்

கோல்குங் கொடிபோய் நுடங்கியிட
வோங்கும் பளிக்கு நிலாமுற்றத்
துயர்சூ ளிகையின் மரகதத்தி
ஞெளிகால் வீசத் தெளிவிசும்பிற்

பல்குஞ் சுரபி தரங்கநெடும்
பாகீ ரதியின் கரைகிளைத்த
பசும்புல் லெனச்செந் நாவளைக்கும்
பைம்பொற் றலங்கள் பலகோடி

மல்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. க

23. தொடுக்குந் தொடைவெண் டுகிற்கொடிக
டொடுநீர்ப் பரவை முகம்புழுங்கத்
தோன்றும் பரிதி மணித்திண்டேர்
தூண்டுங் கலின வாம்பரியை

முடுக்குஞ் சுடர்ப்பொற் றலத்திழைத்த
முழுநீ லத்தி ஞெழுகொளியின்
முழுகுங் கடவுண் மால்யானை
முகிலிற் றேன்ற வகலிடநின்

றடுக்குங் களிறென் றாமகளி
ரையுற் றிடத்தன் வெளிறுமுடம்
பளறு படிந்த தெனக்கங்கை
யாற்றுப் பசும்பொ னசும்புபுனன்

மடுக்குஞ் செல்வக் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ உ

24. தீற்றுஞ் சுதைவெண் ணிலவெறிப்பத்
திரண்மா மணிகள் வெயில்விரிக்குஞ்
செம்பொற் றலத்துப் பேரமர்க்கட்
சிறியார் நறிய வகிற்புகையிட்

டாற்றுங் குழற்காட் டினைப்புயலென்
றூடு மயில்கண் டம்பவளத்
தரும்பு நகையைச் சகோரப்புள்
ளருந்த விரிந்த முழுநகைவிண்

ணேற்று நிலவுக் கிந்துசிலை
யொளிர்மா ளிகையுஞ் சூளிகையு
முருகிப் பெருகுங் கலுழிவெள்ள
முவரோ டெரிக் கடற்புலவு

மாற்றுங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. ந

25. கிளைக்குஞ் சகரர் தொட்டபெருங்
கிடங்கென் றிடங்கர் மாவியங்குங்
கீழ்நீ ரழுவக் குண்டகழி
கெழுமு புனற்றெண் டிரைமேய்ந்து

திளைக்குங் கமஞ்சூ னெடும்புயலைச்
சிறுகட் பெருங்கைப் பகடென்றோர்
செங்கட் களிறு பிளிறநிமிர்
திகிரி கிரியென் றிவர்ந்துடல

மிளைக்கும் படிவிண் டொடநிவந்த
வெழிற்பொற் புரிசை விண்டுபதத்
தேறு மேணி பொற்றருவுக்
கிடுவே லியுமா யேழுலகும்

வளைக்குங் கடவுட் கந்தபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. ௪

26. சோலைப் புறமும் புடைக்கனிக
ளேக்கு முடத்தெங் கிமையவர்தந்
தோன்றற் றிருவோ லக்கத்துத்
தோகை மயிலி னடங்குயிற்று

மேலக் கருங்கொந் தளவளகத்
திளமா தருக்கு முதிர்வேனி
விளைப்பாற் றுதற்குத் தாற்றெருடுஞ்செவ்
விளநீர் கொடுப்ப வீற்றுளைந்த

காலப் புயலின் முகந்துடைக்குங்
கமுகு பழுக்காய்ப் பவளமுடன்
கதிர்முத் திட்டுச் செழும்பாளைக்
கற்றைக் கவரி புடையிரட்டும்

மாலைப் பழனப் பரிதிபுரி
வாழ்வே தாலோ தாலேலோ
மலையாள் வயிறு வாய்த்தமுழு
மணியே தாலோ தாலேலோ. ரு

வேறு

27. மாலி மயத்து மடப்பிடி பெற்று
வளர்த்த விளங்களிறே
மழவிடை யேதிரு மாமடி கட்டென
வைத்த கவுத்துவமே

மூல மெனக்குல நான்மறை யோலிடு
முழுமுத லேமுவா
முக்கட் கனிகனி யுஞ்சுவை யேதனி
முத்திக் கொருவித்தே

காலை யிளங்கதி ருக்கெதிர் முதிருங்
கதிர்செம் பவளமுடன்
கதிர்முத் திட்டு வணங்கக் கன்னல்கொல்
கமுகுகொ லெனவளருஞ்
சாலி வயற்றமிழ் வேளூ ரடிகேள்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ. ௬

28. கருமுகி லுக்கரி தாமடி வாரங்
கண்டிரு பறவைகடங்
கண்களி பொங்கவொர் பறவை முடித்தலை
காணு திட்குவரப்
பொருபுன லருவித் தலையின் மிசைத்தவழ்
புதுமதி நிலவொழுகப்
புள்ளூ ரிற்பொலி வெள்ளி மலைக்கட்
பொன்மலை யைக்குவவு
குருமணி வயிரப் புயமெனு மெட்டுக்
குவடுஞ் சுவடுபடக்
குத்திப் பொருமிரு கோடு படைத்ததொர்
கூந்தற் பிடிபெற்றுத்
தருமொரு தொந்தித் தந்திக் கிளையாய்
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ. ௭

29. உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட
வொளிவிடு முழுமணியே
யுயர்மறை நூற்கலை முடிவின் முடிந்திடு
மொழுகொளி மாகதமே

விண்ணொடு மண்ணை விழுங்கி யருட்கதிர்
விரியு மிளஞ்சுடரே
மெய்ப்புலன் வேய்ந்து சமைந்ததொர் வீட்டை
விளக்கும் விளக்கொளியே

புண்ணிய நாறுமொர் பெண்கனி கனியும்
புனித நறுங்கனியே
புள்ளு றெனவெம துள்ளத் தடநிறை
புத்தமு தக்கடலே

தண்ணொளி பொங்கிய கருணை நிதியே
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் றலைமைப் புலவா
தாலோ தாலேலோ. அ

வேறு

30. தோலா தமுத்தமிழ் நாவா மூவா மாவாமச்
சூர்வே ரறத்தொடு வேலா நூலா நூலோதுஞ்
சீலா மலைக்கொடி பாலா கீலா மேலாகுந்
தேவா திபற்கொரு தேவா வோவா தேகூவுங்
காலா யுதக்கொடி வீறா வேறா வேறேறுங்
காபா லிபெற்றகு மாரா வீரா பேராளா
சேலார் வயற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனா பதிப்பெரு மாளே தாலோ தாலேலோ. கூ

31. உளானா யுயிர்க்குயி ரானாய் தாலோ தாலேலோ
வோதா துணர்ந்திடு போதா தாலோ தாலேலோ
வானா வருட்கனு பானா தாலோ தாலேலோ
வாயா தசொற்சொலு பாயா தாலோ தாலேலோ
நானா யெனக்கரி தானாய் தாலோ தாலேலோ
நாதா திகட்கனு பூதா தாலோ தாலேலோ
தேனார் பொழிற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனா பதிப்பெரு மாளே தாலோ தாலேலோ. க0

ச. சப்பாணிப்பருவம்

32\. முடங்குந் திரைப்பரவை வயிறுளைந் தீன்றநறு
முளரிப் பிராட்டிவைத்து
முத்தாடு பச்சைப் பசுங்கிள்ளை யெனமழலை
முதிருமென் குதலைகற்பத்

தோடங்குங் குறப்பாவை கற்றைக் குழற்கதிற்
றாமமொடு தாமமிட்டுச்
சுடிகைநுதல் வெயர்வுந் துடைத்தொழுகு கத்தூரி
தூரியங் கொண்டுதீட்டிக்

கூடங்கைக் கடங்கா நெடுங்கட் கடைக்கழகு
கூரவஞ் சனமெழுதிமென்
கொங்கைத் தடத்தும் பசுங்களப மப்பியவள்
குற்றேவன் முற்றுமாற்றித்

தடங்குங் குமப்புயங் கொட்டிநட மிட்டவன்
சப்பாணி கொட்டியருளே
தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. க

33\. மழைக்கொந் தளக்கலப மயிலிளஞ் சாயனெடு
மதாரிக் கொண்டையுண்கண்
மான்கன்றை யமருலகு வாழப் பிறந்திடு
மடப்பிடியை வானவில்லைக்

குழைக்குந் தடக்கைத் திருத்தாதை நீரொடு
கொடுப்பக் குடங்கையேற்றுக்
கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பவக்
கொம்பமின் கொடியினெல்கி

யிழைக்கும் பசும்பொற் றசும்பென வசும்புபொன்
னிளமுலை முகங்கோட்டிநின்
றெய்யாமை நோக்கும் படைக்கட் கடைக்கணேக்
கின்னமுத மூற்றவின்பந்

தழைக்கும் பெருங்காதல் வெள்ளந் திளைத்தவன்
சப்பாணி கொட்டியருளே
தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. உ

34. உண்ணிலா வுவகைத் தடங்கடல் படிந்திட்ட
வும்பருஞ் செங்களம்பட்
டொண்பரிதி யுடல்கிழித் தோடுங் கடற்றானை
யொளிறுவா ளவுணர்குழுவுந்
தேண்ணிலா மதிநுதற் றெய்வப் பிணுக்கள்வாய்த்
தேனமுது மமுதவாரித்
தெள்ளமுது முடனிருந் துண்ணப் பணித்திட்ட
செங்கைவேல் பைம்புனத்துப்
பண்ணுலா மழலைப் பசுங்கிளவி யெயினர்பொற்
பாவைவிழி வேலொடொப்புப்
பார்க்குந் தொறுந்தலை கவிழ்த்துநின் றவடிருப்
பவளத்து முத்தரும்புந்
தண்ணிலா வுக்கொண் சகோரமென நின்றவன்
சப்பாணி கொட்டியருளே
தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. ரு

35. மடநடைத் தெய்வக் குறப்பாவை திருவுருவின்
மயிலிளஞ் சாயலுநிலா
மணிவட மறப்புடைத் திறமாந்த கனதன
வனப்புங் குறித்துநோக்கி
யிடுகிடைப் பாவிக் கினிப்பிழைப் பில்லைகொ
லெனுத்திரு வுளங்குழைந்தாங்
கேந்திளங் கொங்கையை யிணைப்புயத் தேந்திநின்
றெல்லா வுறுப்புநிற்கக்

துடமுலைக் கேயிவள் குடிப்பிறப் புக்கியை
குணங்கிடைத் தருகொலென்னக்*
கோதைநெடு நாணெய்த வவயவங் கட்குள
குணுகுணந் தனிதெரிக்குந்

தடமலர்க் கைத்தலஞ் சேந்தொளி துளும்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. ச

36. விண்ணென் கடற்புவன முடவுப் படத்தேந்து
வேந்துபொலி பாந்தள்வைப்பும்
விரிநீர் வரைப்புமெழில் விஞ்சைய ரிருப்புமுகை
விண்டுநறை விரிமுண்டகக்

கண்ணன் றிருப்பதமு நான்முகக் கடவுள்பூங்
கஞ்சமுங் குலிசப்பிரான்
கற்பகக் காவுநின் றொண்டர்க டொழும்புக்கொர்
காணியா வைத்துமற்றத்

திண்ணென் றடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட
சீறூரு மூரூர்தொறுஞ்
செந்தினைப் புனமூடு தண்சாரல் பிறவுமாஞ்
சீதனக் காணிபெற்றத்

தண்ணென் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்
சப்பாணி கொட்டியருளே
தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. ரு

வேறு

37. கடலைச் சுவற வடித்து மிடித்துக்
கனவரை தகள்கண்டுங்
கடிதிற் றிரிய வகுப்பதை யொப்பக்
காரவு ணக்கடலி

*லென்றக் என்று பாடங்கொள்வாருமுளர்.

னுடலிற் பெருகிய குருதிக் கடல்பிண
வோங்கலொ டோங்கவமைத்
தொட்டிய வொட்டல ரிற்பிற கிட்டவ
ரொழியப் பிறரையெலாந்

தடவுத் தாழியின் மத்தெறி தயிரிற்
றத்துதி ரப்புனலிற்
றசைகுடர் நிணமொடு மூளை குழம்பச்
சமர்விளை யாடல்செயுந்

துடிமிச் சுடர்வடி வேலைத் தொட்டவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி.

38. சமரிற் பட்டவர் வெட்டிய பூதத்
தலைவர்க ணிற்பமுதற்
றமரை நாயகன் வயிறு கிழித்துத்
தந்தொழி றலைநின்றுந்

குமரிற் குரிய மடக்கொடி யாரை
யலைத்தனர் பற்றியெயிற்
றவுண ரெனத்தமை யுணரார் கணவர்க
ளார்ப்பில் வெடித்தபெருங்

குமரிற் குருதி பிலத்தை நிரப்பிடு
களமெதிர் கண்டினியக்
காரவு ணக்கடல் சூரொடு மாளக்
கடிதிற் றடிதியடற்

குமரக் கடவு ளெனப்பணி வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி.

39. அற்ற வுடற்குறை யிற்ற முடித்தலை
யங்கைத் தலம்வைத்திட்
டாடு பறந்தலை யோடுதி ரப்புன
லாறு கடத்துகெனுஞ்

சிற்றல கைக்கொரு பேரல கைப்பெண்
டோழி யக்கழியுந்
திகிரிப் பரிசில் விடப்படு சுழியிற்
றெருமரல் மட்பகைஞன்

பற்றிய திரிகை திரித்து விடத்திரி
பரிசென வுஞ்சுழலும்
பம்பர மெனவும் வரும்படி யவுணர்
படக்கள வேள்விசெயாக்

கோற்ற மகட்புண ருஞ்சுடர் வேலவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி. அ

வேறு

40. வளரிள வனமுலை மலைமக ளுக்கொர் தவப்பேறே
மறிதிரை பொரநிமிர் கருணை கொழித்த பெருக்காறே
யளியுமி னமுதெழு வெளியினில் வைத்த சுவைத்தேனே
யறமுது தவமொடு வளர வளர்த்திடு நற்றூயே
களிமயில் கடவிவி ணடைய முடுக்கிய புத்தேளே
கலைமறை யெனுமுரல் வரியளி மொய்த்த மலர்க்காவே
தெளிதமிழ் பழகிய மதவலி கொட்டுக சப்பாணி
தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. கூ

41. கனியொடு சுவையமு தொழுகிய சொற்பயி றத்தாய்வேள்
கணையொடு பிணையென வுலவு கடைக்கண் மடப்பாவாய்
நனைமலர் பொதுளிய வெழிலி தழைத்த குழற்கோதாய்
நளிர்புன மிசைவளர் கலபம் விரித்த மயிற்பேடே
யெனவொரு குறமக ளடிமுடி வைத்தனை முத்தேவா
மிறைவரு முறைமுறை பணிய விருக்கு முதற்றேவே
சினவிடை யவாருண் மழவிடை கொட்டுக சப்பாணி
தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. ௧0

ரு. முத்தப்பருவம்

42. குருகு நாறு செந்தளிர்க்கைக்
கொடிநுண் ணுசுப்பிற் கோட்டிமயக்
குலப்பூங் கொம்பு நறவூழ்த்த
கொழுந்தா மரையோ டவிழ்ந்ததுழாய்ச்

சுருகு நாறு முடைத்தலையின்
ருமநாறு திரடிண்டோட்
டாதை யாருங் கண்டுகண்டு
தடங்கண் களிப்பக் குரவுவிரிந்

தருகு நாறு திருமேனி
யந்தீங்குதலை மழலைகனிந்
தமுத மூறு பசுந்தேற
லசும்பு நாறத் தெய்வமண

முருகு நாறஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. க

43. நறவு விரிந்த விரைத்தோட்டு
நளினத் தொட்டிற் றடமுலைப்பா
னல்கி வளர்த்த கைத்தாயர்
நகைவாண் முகத்து மார்பகத்துங்

குறுமெ னடைய சிறுபசுங்காற்
குருதி ததும்ப வுதைந்துசில
குறும்பு செயத்தா ணேமெனமென்
கோல்கொண் டோச்சப் பெரும்புவன

நிறுவு மொருநின் பெருந்தன்மை
நினைந்தாய் போலக் கனிந்தமுது
நெக்குப் பசுந்தே னசும்பூற
நெடுவெண் ணிலவு விரிந்தகுறு

மூறுவ லரும்புஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. உ

44. பொழியுங் கருணைப் பெருவெள்ளப்
புணரி பெருகி யலையெறியப்
பொங்கி யெழுந்த பெருங்காதற்
புளகம் போர்ப்பப் போதுசெயும்

விழியு மனமுங் குளிர்தூங்க
விரிநீர்ச் சடிலத் தொருவனிரு
வீணைக் குதவுந் திருச்செவிகள்
விருந்தாட் டயர விரைகொழித்து

வழியுங் கொழுந்தேன் பிழிந்திட்டு
மதுர வமுது குழைத்தூற்று
மழலை ததும்பப் பழமறையை
வடித்துத் தெளித்த வார்த்தையொன்று

மொழியும் பவளச் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. ௩

45. கலைப்பா னிறைந்த முதுக்குறைவிற்
கல்விச் செல்வர் கேள்விநலங்
கனியக் கனிய வமுதூறுங்
கடவுண் மறையு முதற்சங்கத்

தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியுந்
தண்டே னறையும் வடித்தெடுத்த
சாரங் கனிந்தூற் றிருந்தபசுந்
தமிழு நாறத் தடங்கரைகொ

லலைப்பாய் புனற்றெண் கடல்வைப்பு
மகிலாண் டமும்பன் முறையீன்று
மழகு முதிர முதிராவென்
னம்மை யமுது சுறற்கொண்ட

முலைப்பா லூறுஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. ச

46. புயலுண் டிருண்ட கொந்தளமும்
பொன்னங் குழையு மின்னகையும்
புளகம் பொதிந்த விளமுலையும்
புருவச் சிலையும் போர்த்தடங்கட்

கயலுங் கலப மயிலியலுங்
கன்னிப் புனத்தோர் பெண்ணமுதின்
காமர் நலனும் பன்னிரண்டு
கண்ணுன் முகந்துண் டின்னமுதி

னியலுஞ் சுவைநல் லவியொடுநீத்
தேக்கற் றிருந்தத் தாக்கணங்கி
னிழுமென் குதலை கனிந்தூறு
மிதழ்த்தேன் சுவைகண் டேமாப்பான்

முயலுங் குமுதக் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தந் தருகவே. ரு

வேறு

47. கோடுபடு கொங்கைக் குவட்டுக் கிளைத்திட்ட
கொடியிடைக் கடைசியர்குழாங்
குரவையிடு தழனியிற் கொண்டறிரை யத்தாவு
குழவுப் பகட்டுவாளை

சேடுபடு புத்தே ணிலத்துப் புனிற்றிளஞ்
சேதா வயிற்றுமுட்டச்
செங்கன் றெனத்தடவு மடிமடை திறந்தூற்று
தீம்பால் சினைக்கற்பகத்

தேடுபடு தடமலர்த் தேனருவி யொடுசொரிந்
தேரியொடு கானிரம்ப
விழுதுபடு கழனியுந் தெய்வமண நாறவேன்
றின்சுவை முதிர்ந்துவிளையுங்

காடுபடு செந்நெல்லைங் கன்னனிகர் புள்ளூர
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே. சு

48. துளிதூங்கு மழைமுகிற் படலங் கிழிக்குந்
துகிற்கொடிகள் சோலைசெய்யத்
தோரண முகப்பிற் றவழ்ந்தேறு கலைமதித்
தோற்றத்தை யறுகான்மடுத்

தளிதூங்கு தேனிரு விதுதம்மின் வம்மினென்
றழிநரு வார்ந்துநிற்கு
மந்நலார் கைகூப்ப வாடவர் பிழிந்தூற்று
மளவினப ராதமிதெனு

ஒளிதூங்கு முகமதிக் கொப்பென்கி லேன்விடுதி
ருயிரொன்று மெனவிடலுமவ்
வுடுபதிக் கடவுணற வுண்டமற் றவரினு
முய்ந்தோ மொழிந்தோமெனுக்

களிதூங்கு மாடமலி கந்தபுரி வருமுருக
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே. எ

49. பூமரு வுயிர்க்குங் கருங்கொந் தளத்துவிரி
பூந்துகட் படலமுமணம்
பொங்கிய நறும்புகைப் படலமுங் காலமழை
பொழிமுகிற் படலஞ்செயத்

தாமரை முகச்சோதி யெழவெழுஞ் சிறுமுறுவ
றண்ணிலவு செயவெயில்செயத்
தழன்மணிக் கலனக ணிதம்பமொடு வெம்முலை
தடங்கடலு மலையுஞ்செயத்

தேமரு குழற்கோதை மயிலனீர் கோசிகன்
செம்மலென வேறுபுவனஞ்
செயவும்வல் லீரென மணந்திடை தணந்தவர்சொல்
செஞ்சொற் பசுங்கிளிசொலக்

காமரு மனங்குழைய மாதர்பயில் வேளூர
கனிவாயின் முத்தமருளே
கங்கைக்கு நெடியவன் றங்கைக்கு மொருமகன்
கனிவாயின் முத்தமருளே. அ

வேறு

50. மதியு நதியு மரவும் விரவு மௌலி யொருவன் முக்கணும்
வனச முகமு மகமு மலர மழலை யொழுகு சொற்சொலும்
புதல்வ விமய முதல்வி யருள்செய் புனித வமரர் கொற்றவன்
புதல்வி தழுவு கொழுந குறவர் சிறுமி குடிகொள் பொற்புய
கதிரு மதியு மொளிர வொளிரு மொளிய வளிய கற்பகக்
கனியி னினிய வுருவ பருவ மழையி னுதவு கைத்தல
முதிரு மறிவி லறிஞ ருணரு முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின் முருக தருக முத்தமே. கூ

51. வடிவி னழகு மெழுத வரிய புயமு நறிய செச்சையு
மருமம் விரவு குரவு மரையின் மணியு மணிகொள் கச்சையுங்
கடவு மயிலு மயிலு மொழுகு கருணை வதன பத்மமுங்
கமல விழியும் விழியு மனமு மெழுதி யெழுதி நித்தலு
மடிக ளெனவு னடிகள் பணியு மடிய ரலது மற்றும்வே
றமரர் குழுவு மகில மறையு மரியு மயனு முற்றுநின்
முடியு மடியு முணர வரிய முதல்வ தருக முத்தமே
முனிவர் பரவு பரிதி புரியின் முருக தருக முத்தமே. கo

சு. வருகைப்பருவம்

52. செம்பொற் கருங்கழ லரிக்குரற் கிண்கிணி
சிலம்பொடு கலின்கலினெனத்
திருவரையி லரைமணி கிணின்கிணி னெனப்பொலந்
திண்டோளின் வளைகலிப்ப
வம்பொற் பகட்டுமார் பிற்சன்ன வீரமு
மாரமுந் திருவில்வீச
வணிமகர குண்டலம் பரிதிமண் டலமென்ன
வலர்கதிர்க் கற்றைசுற்றப்
பைம்பொற் சுடர்ச்சுட்டி கட்டுசூ ழியமுடன்
பட்டமொளி விட்டெறிப்பப்
பங்கய மலர்ந்ததிரு முகமண் டலந்தொறும்
பனிமுறுவ னிலவரும்பக்
கும்பப் படாமுலை மலைப்புதல்வி செல்வக்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே. க

53. மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்டுகின்
மடித்தல நனைப்பவம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி யெம்பிரான்
மார்பினிற் குரவையாடி
முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கியனன்
மோலிநீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின்
முதுபசிக் கறுகருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையமாடிக்

துழவுமுதிர் செவ்விப் பெருங்களி வரச்சிறு
குறும்புசெய் தவன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமாரகுரு பரன்வருகவே. ௨

54. இருளற விமைக்குநின் றிருவுருவி னலர்சோதி
யிளஞாயி றெனமுகையவிழ்ந்
தேடுவிரி தாமரைக் காடுமுகிழ் நகைநில
வெறிப்பவலர் குமுதவனமுங்

கரைபுரள வலைமோது கடலைக் கலக்குமழ
களிறென வுழக்கியொருநின்
கண்மலர்கள் செம்மலர்க ளாகமோ கப்பெருங்
கலவியங் கடலின்மூழ்கும்

வெருளின்மட ஞேக்கினீ ரரமகளி ருடனுடும்
விளையாட் டெனத்திரைபொரும்
வெள்ளநீர்ச் சரவணப் பொய்கையந் துறையினீள்
வீரர்க ளெனுங்கோளரிக்

குருளைக ளொடும்புனல் குடைந்துவிளை யாடிய
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமாரகுரு பரன்வருகவே. ௩

55. கட்டுண்ட படர்சடைக் காட்டெம் பிரான்வைத்த
கலைமதியொ டையநீயக்
கவுரிதிரு முடியினித் திலமிட் டிழைத்திட்ட
கதிரிளம் பிறையிணைப்பத்

தேட்டுண்ட போன்முழுத் திங்களென் றேக்கறுஞ்
செழுமணிச் சூட்டுமோட்டுச்
செம்பாம்பு பைவிரித் தாடுதலு மோடிநின்
சிறுநறுங் குஞ்சிக்கிடு

மட்டுண்ட பைங்குலைக் காந்தளென் றணையவம்
மாசுணம் வெருண்டோடலு
மணிமுடியி னருகதலையை மற்றெமை நகைத்தியான்
மலரவன் றலைநீமுனங்

குட்டுண்ட தறியாய்கொ லெனவித ழதுக்குங்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே. ௭

56. அங்கைத் தலத்தம்மை செங்கண் புதைத்தற்
கடங்காமை யாலெம்பிரா
னலர்விழிகள் பொத்தலு மிருட்படல மூடவுள்
ளஞ்சிநின் றேங்கவேங்கிச்

செங்கைத் தலங்கொண் டெடுத்தணைப் பாட்குந்
திருத்தாதை யார்க்குமுத்தந்
திருமுகமொ ராறுங் கொடுப்பக் கதுப்பிற்
றெறித்தமுத் தந்தருகெனுங்

கங்கைக்கு நல்கா தெழுந்தலறி யோடலுங்
கண்ணீர் துடைத்தெடுத்துக்
கான்மலரு நீவித்தன் மார்புற வணைக்குமக்
கவுமாரி யருண்மாரியிற்

கோங்கைக் குடங்கொட்டு பாலருவி யாடுங்
குமாரநா யகன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே. ௫

வேறு

57. பைந்தண் கமல வட்டவணைப்
பாவை யனையார் பூவிரியும்
பசுமென் குழற்கூட் டகிற்புகையின்
படல மூட முடைநறவின்

கந்தம் பொதிந்த செந்துவர்வாய்க்
கடைசி மகளிர் செந்நெலைப்பைங்
கன்ன லெனவுங் கன்னலைப்பூங்
கமுக மெனவுங் கடைக்கூடாத்
தந்தங் கருத்துக் கமைந்தபடி
சாற்றிச் சாற்றி முழுமாயச்
சலதி மூழ்கித் தடுமாறுஞ்
சமயத் தவர்போற் றலைமயங்கு
மந்தண் பழனக் கந்தபுரிக்
கரசே வருக வருகவே
யருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே. சு

58. வள்ளைக் குழையிற் றுவடிபோ
மடமா னோக்கிற் கடைசியர்கண்
மாலைக் குழல்வண் டோலமிட
மடுவில் வெடிபோம் வரிவாளை
பள்ளத் திருடேங் கழுவநீர்ப்
பாப்பென் றகல்வான் மிசைத்தாவப்
பாகீ ரதித்தீம் புனல்கிடைத்த
பரிசு வீட்டின் பயன்றுய்க்கு
முள்ளக் கருத்தாற் பிறிதொன்றை
யுண்மைப் பொருளென் றுள்ளவுந்த
முணர்விற் றெய்வங் கடைக்கூட்ட
வுறுதி கிடைத்த படிபோலு
மள்ளற் பழனப் புள்ளூருக்
கரசே வருக வருகவே
யருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே. எ

59. நஞ்சிற் றோய்த்துக் கொலைதீற்று
நயன வேலுங் கரும்புருவ
நாமச் சிலையு மகலல்கு
லகுபொற் றேரு மிகல்கடந்து
வஞ்சிக் கொடிநுண் ணிடைசாய்த்து
மதர்த்துக் களித்த மால்களிறு
மற்றும் படைகள் பற்பலவும்
வகுத்துக் கொண்டு மடலவிழ்ந்த
கஞ்சத் தவிசிற் றிருவன்னார்
கடலந் தானைக் கைநிமிரக்
காமன் படைவீ டெனப்பொலியுங்
காட்சி யானு மப்பெயரிட்
டஞ்சொற் றமிழோர் புகழ்வேளூர்க்
காசே வருக வருகவே
யருளா னந்தக் கடற்பிறந்த
வமுதே வருக வருகவே. ௮

வேறு

60. உலகு குளிர வெமது மதியி லொழுகு மமுத கிரணமே
யுருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழுந லுதயமே
கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
யலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி னிலயமே
யறிவு ளறிவை யறியு மவரு மறிய வரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யனைய மதலை வருக வருகவே
வளமை தழுவு பரிதி புரியின் மருவு குமரன் வருகவே. ௯

61. இழுமெ னருவி சொரியு மிமய முதல்வி புதல்வன் வருகவே
யியலு நடையும் வடிவு மழகு மெழுத வரியன் வருகவே
யொழுகு கருணை முழுகு கமல வதனன் வருக வருகவே
யொருவ னிருவ ரொடுகை தொழுந லுபய சரணன் வருகவே
விழுது விடுவெ ணிலவு பொழியு நகையன் வருக வருகவே
விளரி பயிலு மளியு ஞிமிறும் விரவு குமரன் வருகவே
மழலை முதிரா முதிரு மதுர வசனன் வருக வருகவே
வளமை தழுவு பரிதி புரியின் மருவு குமரன் வருகவே. ௧௦

எ. அம்புலிப்பருவம்

62. மண்டலம் போற்றுருவ மமுதமய மாய்முழு
மதிக்கடவு ளெனவருதலால்
வானுறு தலைமடுக் கப்பொங்கு மானந்த
மாக்கட லிடைத்தோன் றலாற்

றண்டலில் கொடிச்சிவாய்க் குமுதம்விள் ளக்காத்
தாமரை முகிழ்த்திடுதலாற்
சகலபுவ னத்திலு முயிர்ப்பயிர் தழைப்பநற்
றண்ணளி சுரந்திடுதலாற்

றுண்டமதி நதியொடு பொதிந்தவே ணிப்பாஞ்
சோதிகட் பொறியாதலாற்
ரேன்றலிவ னின்னையொத் துளனு னினக்குமொரு
துணையிவன் போலில்லைகா

ணண்டாண் டத்தொடகி லாண்டம் படைத்தவனொ
டம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. க

63. சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந்
தோகைமேல் கொண்டருளினுய்
தோற்றிமுன் பொங்கிமலை போலவலை மோதுமச்
சோதிவே லையுமுகந்தாய்

கூற்றமில் குணத்தைக் குறித்தவிர வலர்முகங்
கோடா தளித்தல்செய்தாய்
கோகனக நாயகன் வரக்கூ விடுங்குக்
குடங்கொடிய தாகவைத்தா

யுற்றிடு மிதழ்க்குமுதம் விண்டுதண் டேனொழுக
வொளிநிலா நகைமுகிழ்த்தா
யுன்செய்கை யெம்பிரான் றன்செய்கை போலுமா
லுனையுமிவ னெவ்வாதிரா

ன்றபொதி களத்தவ னளித்தகும ரேசனுட
னம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. ௨

64. கங்கைமுடி யடிகட்கொர் கண்ணு யிருத்தியக்
கண்ணினுண் மணியிவன்காண்
கலைகள்சில நிறைதிபின் குறைதியிவ னென்றுமொண்
கலைமுழுது நிறையநின்று
னேங்குமிர வோனெனத் திரிதியிவ னடியவ
ரெவர்க்குமிர வினையொழித்தா
னிருநிலத் தங்குரிக் கும்பயிர் வளர்த்தியிவ
னெவ்வுயிரும் வாழச்செய்தான்
பொங்கமுத மமுதா சனர்க்குதவி னுயிவன்
புத்திமுத் தியுமளித்தான்
புவனம் படைத்தவிவ னின்னின்மிக் கானெனப்
புகல்வதோர் பொருளன்றுகா
ணங்கண்மறை யோலிட் டாற்றநின் றவனுட
னம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. ௩

65. பாயிருட் போதத் திருட்டன்றி யகவிருட்
படலங் கிழிப்பதுணராய்
பனிவிசும் பிற்பொலிவ தொன்றலாற் புவனப்
பரப்பெலாம் பொலிவதோராய்
சேயிதழ்க் குமுதந் திறப்பதல் லாதுளத்
திருமலர் திறக்கவறியாய்
சிறைவிரி சகோரப்பு ளன்றியெவ் வுயிருந்
திளைத்தின்ப மாரச்செயாய்

நீயிவற் கொப்பன்மை செப்புவதெ னிப்பரிசி
னின்பெருந் தவமென்சொல்கே
னெடியவன் முதற்றேவர் குறைகினிற் பவுமுனை
நினைத்தழைத் தருளினன்கா
ணுயிர மறைக்குமொரு பொருளா யிருப்பவனொ
டம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே.

66\. தருமன்னு பொன்னுலகு மண்ணுலகு மொக்கத்
தலைத்தலை மயங்கத்தொகுஞ்
சன்னிதி யடைந்தவர்கள் பையுணோய் முற்றுந்
தவிர்ந்தக மகிழ்ந்துதவிராக்
கருமன்னு மூழிப் பெரும்பிணியு மாற்றிடுதல்
கண்டனை யிருத்தியானின்
கயரோக முடன்முயற் கறையுந் துடைத்திடக்
கருதிடுதி யேயெலம்பிரான்
றிருமுன்ன ரள்ளியிடு வெண்சாந்து மற்றைத்
திருச்சாந்து நிற்கவற்றுாச்
சித்தாமிர் தத்தடத் தீர்த்தத் துறைக்குறுந்
திவலையொன் றேயமையுமா
லருவென்ன வுருவென்ன வன்றென்ன நின்றவனொ
டம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே.

67\. ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப
தொருதெய்வ முண்டெனவெடுத்
துரையா லுணர்த்துவதை யொழியவெவ ரெவர்கட்கு
மூன்கண் ணுளக்கண்ணதாம்

விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டிய வரங்கொடுப்பான்
மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவியில்
வேறில்லை யென்றுணர்தியாற்

பொழியாத புயறங்கு புவனமுந் திசைமுகப்
புத்தேள் பெரும்புவனமும்
பொன்னுலகு மண்ணுலகு மெவ்வுலகு வேண்டினும்
பொருளன் றிவற்குமற்றை

யழியாத வீடுந் தரக்கடவ னிவனுட
னம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. ௬

68. நெட்டுடற் பைங்கட் கரும்பேய்கள் செம்மயிர்
நிரைத்தூணம் வீக்கியார்த்து
நிற்குங் குறட்பூத மொன்றினை விடுத்துடலி
னெடியபழு வென்புநெரியக்

கட்டெனப் பிடியெனக் கொடிறுடைத் தடியெனக்
கணநாதர் கடுகமுடுகிக்
கடல்வாய் திறந்தெனப் பிலவாய் திறந்தலறு
காட்சிநீ காணுயலை

மட்டுடைத் தாறுந் தடங்கமலன் முதலியோர்
வாய்புதைத் தஞ்சிநிற்ப
வருகென் றழைத்திடவும் வாரா திருத்தியான்
மற்றிவன் முனிந்தாலுனக்

கட்டதிக் கினிலுமொரு திக்கிலையெ மையனுட
னம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. எ

69. குன்றைத் திறந்திட்ட குடமிவேல் சூருயிர்
குடித்திட விடுத்துநின்றான்
குண்டிகைக் கள்வனைக் குடுமித் தலைப்பசுங்
குருதிபொங் கப்புடைத்தா

னின்றைக் குழந்தையென் றெண்ணாது குலிசன்முத
லெண்மரும் பிறருமொருஞான்
றெதிர்நின் றுடற்றியவர் பட்டபா டறியா
திருத்தியலை யதுகிடக்க

மூன்றக்கன் வேள்விக் களங்கொலைக் களமென்ன
முடியமரர் மொத்துண்டநாண்
முழுமதிக் கடவுணீ யவமதிப் புண்டதை
மொழிந்திடக் கடவதன்று

லன்றைக் கணக்கின்றும் வந்திருக் கின்றதினி
யம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே.

அ

70. தள்ளும் பவக்கட லுழக்குமெனை முத்தித்
தடங்கரை விடுப்பவனுனைத்
தலையளிப் பான்வர வழைப்பவும் வாராவிடிற்
றண்ணளி சுரந்துகருணை

வெள்ளங் கொழிக்குங் கடைக்கண் சிவப்பவிவன்
வெகுளாது விடினுமழுது
விழிசிவப் பக்காணி லிரவிபகை சாய்த்தவிள
வீரன் பொறுப்பானலன்

கள்ளம் பழுத்தகட் கடைசியர் சிறார்திரைக்
காவிரித் தண்டுறைதொறுங்
கதிர்நித் திலங்குவி மணற்குன்ற மேறிநின்
கலைமதிக் கலசவமுதை

---

70. எறியக்கலைமதி என்று பாடங்கொள்வாருமுளர்.

யள்ளுந் தடம்பணைச் சோணாட
னிவனுட னம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. ௯

71. தன்னொத்த தெய்வச் சிறுருமிள வீருந்
தாணிழற் கீழ்நிற்பவிச்
சகதண்ட மண்டல மடுக்கழியு நாளமரர்
தமையழக் காண்பவனிவ
னின்னைப் பொருட்படுத் தொருவிரற் றலைசுட்டி
நீள்கழற் றுளுதைந்து
நெடுமலர்க் கண்பிசைந் தழுதழு தழைத்தன
னினக்கிதில் வியப்பில்லைகாண்
பின்னற் றிரைச்சுர நதித்தண் டுறைத்தேவர்
பேதைக் குழாங்களென்னப்
பெருகுந் தடம்புனற் காவிரிப் பூவிரி
பெருந்தண் டுறைச்சிறைவிரித்
தன்னக் குழாந்திளைத் தாடுசோ ணாடனுட
னம்புலீ யாடவாவே
யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட
னம்புலீ யாடவாவே. ௧௦

அ. சிற்றிற்பருவம்

72\. குறுமென் னடையு நெடுவெணிலாக்
கோட்டு நகையும் வாட்டடங்கண்
குளிர முகந்துண் டொளிர் சுட்டிக்
குஞ்சி திருத்தி நறுங்குதலை

மூறுகு நறைத்தேன் கனிபவள
முத்துண் டுச்சி மோந்துகொண்டுன்
முகமுந் துடைத்து விளையாட
முன்றிற் புறத்துப் பொன்றதும்பி

யிறுகும் புளகக் கும்பமுலை
யெம்பி ராட்டி விடுத்ததுமற்
றிளையார் மறுக மறுகுதொறு
மிடுக்கண் செயற்கோ வெந்தாய்நின்

சீறுகிண் கிணிச்செஞ் சீறடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செங்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. க

73\. கொழுநாண் மலர்க்கற் பகமுநறைக்
குரவு நாறு நறுங்குஞ்சிக்
கோமான் மகனே நங்கள்குலக்
கொழுந்தே யென்று குறையிரந்து

தொழுவா னவர்த முடிசூட்டுஞ்
சோதி முடியிற் றுகளெழநின்
றுணைத்தாள் வண்டற் றுறைப்புழுதித்
தூளி படினும் படுகசுடர்க்

கழுவா மணியு நிலவுவிரி
கதிர்நித் திலமு முமையம்மை
கண்ணி லுறுத்த வடிகேணின்
காலி லுறுத்தல் கடனன்றாற்

சேழுநான் மறையின் பெருஞ்செல்வச்
செருக்கே சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. உ

74. வழிக்குப் புறம்பா யாமிழைத்த
வண்டன் மனையவ் வசுரேசன்
வான்கூட் டுண்பா னடுக்கடலில்
வகுத்த நகரென் றிகழாமே

கோழிக்குஞ் சிறுமுற் றினில்வாரிக்
கொடுவந் தடியே மனைமுன் றிற்
குவியா நின்ற மணிக்குவையக்
குருகு பெயர்க்குன் றமுமன்றாம்

சூழிக்குண் டகழி வாய்மடுப்பச்
சுடர்வால் வளைத்தெண் டிரைக்காத்தாற்
சுரபி சொரிபான் மடையடைத்த
சோற்றி னேடுங் கலந்தூட்டிச்

சேழிக்குந் தடங்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. ௩

75. மூரிக் களிறோ மழவிடையோ
முடுகிற் றெனப்பார்த் துழியுனது
முகத்தி னழகெம் வடிக்கண்ணுன்
மொண்டுண் டனம்யா *மென்றுமிகப்

பாரித் தோங்கிப் பூரித்த
பைம்பொற் புயத்தைக் கண்ணேறு
பட்டே மெனவு மடிகள்பகை
பாராட் டுவதோர் பண்பன்றால்

---

* மெனவு மிகப் என்றும் பாடம்.

வேரிக் கொழுந்தாற் றிளம்பாளை
விரிபூங் கமுகும் பால்பாயும்
வேழக் கரும்பு மிருட்பிழம்பை
விழுங்கிக் கக்குஞ் சுடர்ப்பரிதித்

தேருக் கெழில்செய் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. ச

76. பொன்னங் கொடிபோ னுடங்குமிடைப்
புத்தேண் மகளிர் விளையாடப்
புனைமா ளிகையுஞ் சூளிகையும்
புதுக்கிக் கொடுத்தாய் பொதுஞான

மெய்ந்நின் றவருள் விழிப்பாவை
விளையாட் டயரவழியாத
வீடுங் கொடுத்தா யெம்மனையும்
விடுத்துச் சென்றான் மிகையுண்டோ

பின்னுந் திரைத்தீம் புனற்கங்கைப்
போராற் றூற்று நகைக்கோட்டுப்
பெருங்கற் பகத்தின் கழுத்தொடியப்
பிறழும் வாளைப் பகடுதைத்த

தேன்னம் பழம்வீழ் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. ரு

77. கானக் குறப்பெண் குடியிருந்த
கன்னிப் புனத்துத் தினைமாவுங்
கமழ்தேன் றெளிவு மூண்டுசுவை
கண்டா யென்றே மதுவல்லான்

மீனத் தடங்க ணவண்மிச்சின்
மிசைந்திட் டதுவு நகைமிக்கு
விரைத்தீங் குமுதத் தமுதடிகள்
விருந்தா டியதும் விண்டோமோ

கூனற் பிறையின் கோடுரிஞ்சுங்
கொடிமா டத்து வெயில்விரிக்குங்
குருமா மணியாற் சுரநதியிற்
கொழுந்தா மரைகண் முறுக்குடைந்து

தேனக் கலருஞ் சோணாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. சு

78. பிள்ளை மதிச்செஞ் சடைச்செருகும்
பெருமா னூர்க்கு முலகேழும்
பெற்ற தாய்க்கு நீயருமைப்
பிள்ளை யெனிலெம் பேராய

வெள்ள மமைத்த சிறுசோறு
வேண்டி விடுகே மலதெளியேம்
விளையா டிடத்துச் சிறுகுறும்பு
விளைத்தாற் பொறுக்க விதியுண்டோ

கள்ள விழிச்சூ ரரமகளிர்
காமன் கொடியேற் றெனவியப்பக்
கற்ப தருவிற் படர்ந்தேறு
காமர் கொடிச்செங் கயல்பாயுந்

தெள்ளு புனற்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. எ

79. மடல்வா யவிழ்ந்த குழற்பேதை
யொருத்தி திருத்தும் பகிரண்ட
மணற்சிற் றிலையோர் கணத்தின்கண்
மட்டித் தாடு மைந்தனருள்

விடலாய் தமியேஞ் சிற்றின்முற்றும்
விளையாட்டாக வொருநீயும்
வீட்டா நிற்பத் தொடங்கினையால்
வித்து மூளையும் வேறன்றே

கடமா மருப்புஞ் சுடர்மணியுங்
கதிர்வித் திலமு மகளிர்முலைக்
களபத் தொடுகுங் குமச்சேறுங்
கரைத்து விடுத்தக் கடற்குட்டந்

திடராச் செயுங்கா விரிநாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

80. வாமாண் கலைப்பே ரகலல்குன்
மடமா னேக்கி னரமகளிர்
மகிழ்பூத் திருப்பப் புத்தேட்கு
வந்த விடுக்கண் மாற்றினையால்

கோமா னினக்கப் பெருந்தேவர்
குலமே யன்றி யடியேமுங்
குற்றே வலுக்கா மகம்படிமைக்
குடியாக் கொண்டாற் குறையுண்டோ

காய்மாண் குலைச்செவ் விளநீரைக்
கடவுட் சாதி மடநல்லார்
கதிர்ப்பூண் முலையென் றேக்கரப்பைங்
கமுகு நகைவாண் முத்தரும்புந்

தேமாம் பொழிற்றீம் புனனாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. கூ

81. கருவீற் றிருந்த பெருங்*கருணை
கடைக்கண் பொழிய வீற்றிருக்குங்
கடவு ணீயே பகிரண்டங்
கண்டா யெனின்வண் டடைகிடப்ப

மருவீற் றிருந்த குழன்மகளிர்
வண்டற் றுறைக்கு மணற்சிற்றின்
மனைகோ லுவது மற்றடிகேள்
வருக்குந் தொழிற்கு மாறன்றே

குருவீற் றிருந்த மணிமாடக்
கொடிமா நகரந் தொறுமலர்ந்த
கொழுந்தா மரைப்பூங் கோயிலிற்பல்
கோடியுருவங் கொண்டுசெழுந்

திருவீற் றிருந்த சோனாடா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செந்நெற் பழனப் புள்ளூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. கo

---

* கருணைக் கடைக்கண் எனப் பாடங்கொள்வாருமுளர்.

௯. சிறுபறைப்பருவம்

82\. **உள**ற்றும் பசுந்தே னுவட்டநெட் டிதழ்விரியு
மொண்காந்தண் முச்சியுச்சி
யொருவனீ மும்முதற் கடவுளு மிளைப்பாற
வுலகெலாந் தலையளித்துப்
போற்றுந் திறத்தினப் பழமறைக் கிழவன்
புரிந்தபகி ரண்டங்கடாம்
புதுக்குவ கடுப்பநெடு வெளிமுகட் டுக்குவிரி
புதுநிலாக் கற்றையிட்டுத்
தூற்றும் பெயர்க்கரு முகிற்படாத் தையும்வெண்
டுகிற்படா மாக்கிவீக்கித்
தொடுகடற் புவனப் பெருந்தட் டொ டண்டச்
சுவர்த்தலத் துக்கும்வெள்ளை
தீற்றுஞ் சுதைத்தவள மாடமலி வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. க

83\. **வி**ளக்கும் பெரும்புவன மொக்கக் கரைத்தகடை
வெள்ளஞ் சுருங்கவீங்கி
வேதண்ட மெட்டினெடு மூதண்ட கூடத்தும்
விளையாடி யுலகமேழும்
வளைக்குங் கருங்கடல் பெரும்புறக் கடலொடும்
வாய்மடுத் தெதிரெடுப்ப
வருபுனற் காவேரி வடநாட நாடொறு
மதிக்கடவு ளேறியேறி
யிளைக்கும் பளிக்கறை முயற்கறை யறக்காலு
மிளநிலா வெள்ளமூழ்கி
யெறிதிரைப் பாகீ ரதிப்புனல் குடைந்திடு
மிடைக்கொடி நகிற்கொடியெனத்

தீளக்குந் துகிற்கொடி முகிற்கொடிசெய் வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. உ

84. இருளுந் தாங்கக் கருங்கடன் முகட்டெழு
மிளம்பிறை முயற்குழந்தைக்
கேறவிடு மோடமென வான்மீன் றடந்திரை
யெடுத்தெறியு நெடுமீனெனத்

தூளம் பதிந்திட்ட மணிமுறுவ லவரோடு
தருநிழற் செல்வருய்க்குந்
தமனிய விமானமும் வெயிற்கதிர்ப் போர்வையான்
றணியாழி திசையுருட்ட

வுருளுங் கொடித்தேரும் வீற்றுவீற் றெழில்புனைந்
தோட்டுபொற் றெப்பமென்ன
வுலகேழு மலையெட்டு மொழுகுகதிர் விழுதுவிடு
மொண்ணிலாப் புணரிகோப்பத்

தீளும் பளிக்குமா டங்கள்பொலி வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. ங

85. மொய்ம்பிற் பெரும்புவன மொக்கச் சுமக்கின்ற
மோட்டாமை முதுகுளுக்க
முடவுப் படங்கிழிந் தாவரசி னுயிர
முடித்தலையு மூளைபொங்கக்

கம்பக் கடாயானை யெட்டும் பிடர்த்தலை
கழுத்தொடு முரிந்துகவிழக்
கதிர்மணிச் சூட்டுநெட் டரவெட்டும் வடவைக்
கடுங்கனற் கண்பிதுங்க

வம்பொற் றடம்புரிசை யெழுபெருந் தட்டுருவி
யண்டகூ டத்தளவலா
லவரவர் வழங்குதற் கிடுதலைக் கடையென
வடுக்கேழு நிலையேழுமாஞ்

செம்பொற் றிருக்கோ புரங்கள்பொலி வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. ச

86. தரிக்குஞ் சுடர்ப்பரிதி முழுமதிக் கடவுளொடு
தடமதில் கடந்தகநகர்
சாரவரி தாற்புவன கோடிகட் கொளிசெயச்
சதுர்முகன் கற்பந்தொறும்

விரிக்கின்ற விருசுடரு மொருவழித் தொக்கென
வியன்கதிர்ப் படலமூடி
வீங்கிருள் விழுங்குசெம் மணிமாட நிரையுமொளி
விளைபசுங் கதிர்வெண்புரி

புரிக்குஞ் செழுந்தரள மாடமும் வெயிலினெடு
பொழிநிலாப் போர்ப்பமுற்றும்
போதுதெரி யாமையிற் குமுதமொடு சதவிதழ்ப்
போதுமே யிருபோதையுந்

தெரிக்குந் தடம்பணை யுடுத்ததமிழ் வேளூர
சிறுபறை முழக்கியருளே
தென்கலைக் கும்பழைய வடகலைக் குந்தலைவ
சிறுபறை முழக்கியருளே. ரு

வேறு

87. மழைமுகில் பிளிறு முழக்கென விரிசிறை
மடமயி லினமகவ
மால்கட லோவிடு மொலியென விரக
மடந்தையர் மனநெகிழப்

பழமறை யார்ப்பென வாகுதி வேட்டெழு
பண்ணவ ருண்மகிழப்
பாநா தத்தொலி யெனவனு பூதி
பலித்தவர் நெக்குருக
வழலவிர் சோதியெ மைய னடஞ்செய
வாயிர மங்கையினோ
ரண்ணறு வைத்திடு குடமுழ வொடுசுட
ராழி யவன்கொட்டு
முழவென வமரரு முனிவரு மார்ப்ப
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே. ௮

88. பெருவெளி முகடு திறந்திட் டண்டப்
பித்திகை வெடியாமே
பேரண் டத்துள வேதண் டங்கள்
பிதிர்ந்துதி ராகாமே
குருமணி சிதறிய வென்ன வுடுத்திரள்
கொட்டுண் டுதிராமே
குவடு படுந்திசை செவிடு படச்சிலர்
குடர்கள் குழம்பாமே
திருவிர லொடுநக கண்களி னுஞ்செங்
குருதி ததும்பாமே
சேயொளி நின்று துளும்பிட நின்சிறு
செங்கை வருந்தாமே
முருகலர் தாரவ னொருமுறை மெல்ல
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே. ௯

89. வம்மி னெனப்புல வோரை யழைத்திடு
வண்கொடை முரசமென
வடகலை தென்கலை யொடுபயி லுங்கவி
வாணர்க ளோடிவர
வம்மென் மடப்பிடி பொன்னுல கீன்ற
வணங்கை மணம்புணரு
மணிகிளர் மணிமுர சென்னவெ மையனொ
டம்மை மனங்குளிரத்
தெம்முனை சாயச் சமர்விளை யாடிச்
செங்கள வேள்விசெயுந்
திறன்முர செனவிமை யவர்விழ வயரச்
செழுநகர் வீதிதொறு
மும்முர சமுமதிர் காவிரி நாடன்
முழக்குக சிறுபறையே
முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன்
முழக்குக சிறுபறையே.

வேறு

90. பெருகுசு வைத்தெளி நறவொழு கக்கனி கனியமுதே
பிடிநடை கற்றிட வடிகள் பெயர்த்திடு மடவனமே
கருவரை நெக்குட னுருகமி ழற்றுமொர் கிளியரசே
கருணை செயத்தகு மளிய னிடத்தெனு மொழிபுகலா
வருளில்பு னத்தவர் மகளிரு பொற்பதம் வருடல்செயா
வவண்மு னெடுத்தநின் முடியின் முடித்திடு கரமலராற்
பருவயி ரப்புய சயிலன் முழக்குக சிறுபறையே
பரிதிபு ரிச்சிறு குமரன் முழக்குக சிறுபறையே. ௯

91. இழுமென் மொழித்தெளி தமிழின் வடித்திடு நவரசமே
யிதய விருட்டற வுணர்வி லுதித்திடு சுடரொளியே
கழுவு மணிக்கல னடுவி லிழைத்திடு குலமணியே
கனிதரு முக்கனி யொடுவடி கட்டிய சுவையமுதே
யொழுகு நறைச்செழு மலர்விரி யக்கமழ் புதுமணமே
யுருகு முளத்தருள் பெருகி யுவட்டெழு சலநிதியே
பழமறை கட்கொரு முதல்வன் முழக்குக சிறுபறையே
பரிதி புரிச்சிறு குமரன் முழக்குக சிறுபறையே. ௧௦

௧௦. சிறுதேர்ப்பருவம்.

92\. போரோடு படைதுறந் தடறிறந் தோடுசெம்
புனலோட வோடிமிரும்
புணரிப் பெருந்தானை யவுணப் படைத்தலைவர்
பூதப் படைத்தலைவர்முன்
றரோ டவிழ்ந்திட்ட குஞ்சிக் கிமைத்திட்ட
தழல்விழிக் கெதிர்செலாத
தாளுக்கு வாள்சோர் தடக்கைக்கு நாமநுந்
தாலிக்கு வேலிகொலெனப்
பீரோடு கொங்கைக்க ணீரோடு வெள்ளருவி
பெருகக் கடைக்கணிற்கும்
பெய்வளை யவர்க்கோத வவர்விழிக டொறுமிளம்
பேதையர்கள் கண்டொறுமெனத்
தேரோடு மொருபெருஞ் சிலையோடு நின்றவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ௧

93\. கம்பக் களிற்றுக் கடற்றானை வீரர்கட்
கடைவிற் கடைக்கனலெழக்
கண்டொட் டுணுஞ்சில மருட்பேய் கரிந்தெழு
கடுங்குருதி வெள்ளமூழ்கித்
தும்பைத் தலைச்செம் மயிர்ச்சிகை யினைச்சுடு
கனற்சிகை யெனப்பதைப்பச்
சூட்டிறைச் சிக்குச் சிணுங்குங் குறட்பேய்க்கொர்
சூர்ப்பேய் கொழுந்தசைகள்கோத்
தும்பிற் சுடத்தான் கவந்தமொடு தொந்தமிட்
டாடும் பறந்தலைநிலத்
தானைப் பிணக்குன்று மவுணப் பிணக்காடு
மளறுபட் டொழியநின்றோர்

92\. நாமனுந் என்றும் பாடம்.

செம்பொற் றடந்தே ருருட்டிவரு சேவகன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ௨

94. வண்டேறு செந்நிறப் பங்கித் தலைக்கமல
வனமூடு குருதியாற்று
மால்யானை கையெடுத் தார்த்துநீந் தப்புணரி
மகரமீ னெனநினைந்து

கொண்டேகு சிறுகுடர் பெருவலை யெடுத்தெறி
குறட்பேய் நெடுஞ்சினமுறக்
குறுநரி பிடித்தீர்ப்ப வலறுவதும் வீரர்தொடு
கொலைநேமி யவுணருயிரை

யுண்டேகு வதுமொருவன் விடவோ லிடுங்கரிக்
குதவவரு திகிரியேய்க்கு
மொல்லென் பறந்தலை மறந்தலைக் கொண்டரு
ருய்த்திட்ட விந்த்ரஞாலத்

தீண்டேரை யுருளாது நிற்கப் பணித்தவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ௩

95. பைங்கட் சிறைக்கால் கடைக்கால் செயக்கிரிகள்
விரிசிறை படைத்தெழுவபோற்
படருந்தன் வேகத்தி னெக்கப் பறக்கப்
பறந்தலைச் செந்தலையறும்

வெங்கட் டயித்திய ருடற்குறை தலைக்குறை
விரைந்துயி ரினைத்தொடர்ந்து
மீச்செல்லு மாச்செல் லெனச்செலப் பூமாரி
விண்டேர்ப்ப தெனவுடுவுகப்

பொங்கற் கடற்குட்ட மட்டதிக் குந்தமிற்
போர்செயப் பார்கவிழவெம்
பொறியுடற் சேடன் படந்தூக்கி யார்க்கும்
புகைப்படலம் வடவாமுகச்

செங்கட் பசுந்தோகை வாம்பரி யுகைத்தவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ச

96. நெய்வைத்த கூந்தற் பிடிக்குதவ நாற்கோட்டு
நிகளத் தடங்குன்றுவா
ணிமிருங் கதிர்க்குலைச் செந்நெலைப் பாகுபடு
நெட்டிலைக் கன்னல்கொலெனக்

கைவைத் திடப்பரி முகஞ்செய்து வெய்யோன்
கடும்பரியை நட்புக்கொளுங்
கழனிவிரி காவிரித் திருநாட கற்பகக்
காட்டிற் பிறந்துபிரியா

மெய்வைத்த காதன்மை யரமகளிர் பேராய
வெள்ளந் திளைத்தாடியோர்
மென்னடைக் கேக்கற்ற பிடிபின் பிடிக்கமுலை
வேழங்க ளுடனுலாவுந்

தெய்வப் பிடிக்குக் கிடைத்ததொரு மழகளிறு
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ரு

97. பற்றுவிற் காமன் கொடிப்படைக் கூறெலாம்
படைவீடு சயல்கடாவும்
பழனங்க ளோவத்ர சாலைபூஞ் சோலைப்
பரப்பெலாங் காற்றேறொடுங்

கோற்றவங் கங்குற் கடாயானை யுங்கட்டு
கூடமே யெனினுமருதக்
கோமகன் குடிகொண்ட சோணாட சேர்ணாடு
குங்குமங் கொட்டுதிண்டோட்

போற்றடங் குன்றிரு கொங்கைப் பொருப்புமொரு
பூங்குழற் காடும்வெயில்கால்
புனைமணிக் கலையல்குன் மாக்கடலு மேந்தியொர்
புனத்தின்கண் மிகநுடங்குஞ்

சிற்றிடைக் கொல்குமென் கொடிபடர நின்றவன்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ௬

98. கோல்பாய் பசும்புண் ணசும்புகும் பத்தடங்
குன்றுகவுண் மடைதிறந்து
கொட்டுநெட் டருவியொடு தேனருவி யுந்திரை
கொழித்துடன் கோப்பமேதிப்

பால்பாய் பெருக்கா றுவட்டெழுத நன்றுணைப்
பாவைய ரொடுங்குறுகுமப்
பாகீ ரதிக்குநிகர் தண்டுறை தொறுந்திக்கு
பாலர்மேற் படையெடுத்து

வேல்பாய் நெடுங்கட் கடற்றூனை யொடுமொருவன்
மேற்செல்ல நாற்றிசையிலும்
வெற்றிக் கயற்கொடி யெடுத்தென வெடுத்தெறியும்
வெண்டிரை கிழித்துவெடிபோஞ்

சேல்பாய் தடம்பணை யுடுத்தகா விரிநாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ௭

---

98. குடையுமப் என்றும் பாடம்.

99. மீத்தந்த மாகத்து மேகத்தி னூடுமுடு
மீனிரியல் போகவுகளும்
வெடிவாளை மதியக டுடைத்தூற்று தெள்ளமுத
வெள்ளருவி யாற்பசுந்தண்

காத்தந்த சண்பகப் பூவேரி மாரிசெய்
காவேரி யாயிரமுகக்
கங்கையா கச்செய்து மீட்டுநாற் கோட்டுவெங்
களிறுபிளி றத்தாவிவான்

பூத்தந்த கற்பகக் காட்டினை யுழக்கிவிரி
பொற்று தெழுப்பிமற்றப்
பூந்துகட் படலத்தி னுற்றெய்வ நதியையும்
பொன்னிநதி யாகச்செயுந்

தேத்தந்த தண்பணை யுடுத்ததீம் புனனாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. அ

100. கள்ளவிழ் நறுங்கொடிகள் கமுகிற் படர்ந்துபூங்
கற்பகத் தும்படர்தலாற்
காமன் பெருஞ்செல்வ மன்னவர்கள் குழுமியக்
கமுகின் கழுத்தில்யாத்த

வொள்ளொளிய செம்மணிப் பொன்னூசல் பன்முறை
யுதைந்தாட வாடுந்தொறு
மொண்கமு கொடுந்துணர்ப் பைங்கற் பகக்காடு
மொக்கவசை யத்தலையசைத்

தள்ளிலை யலங்கல்வே லெம்பிரா னைப்பாடி
யாடுகின் றூரெனத்தா
மலர்மாரி பொழிவபோ லங்கற் பகத்தெய்வ
மம்பொன்மலர் மாரிதூர்க்குந்

தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித் திருநாட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ௯

101. வாராட்டு தடமுலைப் பாலொழுகி வழிவதென
மணிமுறுவ னிலவுகாலு
மழலைவாய் முத்துண்டு முச்சிமோந் துந்திரு
மடித்தலத் தினிலிருத்திப்
பாராட்டி யுந்தம்து கண்மணிப் பாவைநின்
படிவமா கக்காட்டியிப்
பாலரொடும் விளையா டெனப்பணித் துந்தங்கள்
பார்வைகளி யாடச்செயுந்
தாராட்டு மதிமுடித் தீராத வினைதீர்த்த
தம்பிரா னுக்தம்பிரான்
றழலுருவி லொருபாதி குளிரவொரு புறநின்ற
தையனு யகியும்வைத்துச்
சீராட்டி விளையாடு சேணு பதிக்கடவுள்
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. ௧௦

புள்ளிருக்குவேளூர்
முத்துக்குமாரசுவாமிபிள்ளைத்தமிழ்முற்றுப்பெற்றது.

சிவமயம்

அரும்பொருள் விளக்க முதலியன

1. குடுமிப் பொலங்குவடு = இடைப்பிறவரல் வந்த பண்புத் தொகை; குடுமியாகிய குவடு எனவிரிக்க. குவடு = கொடுமுடி. பொழி தவள நிலவு தவழும் எனப் பிரித்துக் கூட்டுக. சிவபெருமான் கைலாய மலையிலே களிற்று யானை வடிவங் கொண்டமையாற் களி றெனப்பட்டார். யானை குறிஞ்சிநிலக் கருப்பொருளாதலால் வெள்ளி வேதண்டக்களிறென அதனைக் குறிப்பித்தார். களிற்றைப் போர் விசேடித்தது. 'தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளில்' என் புழி, கை வேழத்தை விசேடித்தவாறுபோல. சிவபெருமான் களிற்று யானை வடிவங்கொண்ட காலத்து உமாதேவியார் பிடியானை வடிவங் கொண்டமையால் பிடியெனப் பட்டார். அப்பனும் அம்மையுங் களி றும் பிடியுமாகச் சேர்ந்து பெற்றமையின் மூத்தபிள்ளையார் குஞ்சராக் கன்றெனப்பட்டார். இம்முப்பொருளையும்,

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே"

என்னுந் தேவாரத்தா னினிதுணர்க.

தெய்வயானை யம்மையாரைக் கடவுள்வேழம் என்றதற்கிலையய அவர் தனத்தைக் கோடாக உருவகஞ் செய்தார். உவமையினும் உரு வகஞ் சிறந்த தென்பது அணி நூற்றுணி பென்றுணர்க. கடவுள் வேழம், தெய்வயானை யென்பன ஒரு பொருட்சொற்கள். தெய்வ யானையால் வளர்க்கப்பெற்றமையின் அம்மையார் தெய்வயானை யெனப்பட்டார். திருமால் காப்பில் புலோமசை வளர்த்த என்று கூறப்படுதலால் அதனோடு இது முரணுதோவெனின், ஐராவதம் செவி லித்தாயும் புலோமசை நற்றாயுமாகக் கருதப்படுதலின் இருவர்க்கும் அவ்வுரிமையுண்மையின் முரணுதென்க. கடம்படு படா முலை - குடம் உவமை கெடுதற்குக் காரணமாகிய சாயாத்தனம். படுதல் -

கெடுதல். போகத்துக்குரிய மாலை யாதலின் கடம்பும் உடன் கூறினர். கந்தபுரி-வேளூர். அது, முருகக் கடவுள் வைத்திய நாதரைப் பூசித்தமையால் வந்த காரணப் பெயர். கொழிதமிழ் - செந்தமிழ்; கொழித்தல் - ஆராய்ந்து சுத்தஞ்செய்தல்.

2. புணர்முலை என்னும் அடையானே யானையென்றது தெய்வ யானையை யுணர்த்திநின்றது. யானை விளையாடுதற்குரிய இடம் மலையாதலின் சுப்பிரமணியப் பெருமான் பன்னிரு புயங்களும் பன்னிரண்டு மலைகளாக உருவகஞ் செய்யப்பட்டன. விருப்பனைத்தும் சிறுமிமேல் வைத்த குழகனென்க. கோமேவு குறிச்சி, சாரற் குறிச்சி எனத் தனித்தனி கூட்டுக. கோமேவு சிறுமியெனக் கூட்டி நம்பி என்னும் வேட்டுவ அரசனுல் விரும்பப்பட்ட சிறுமி எனறலுமாம். கோ - வேட்டுவ அரசனுகிய நம்பி. மேவுதல் - விரும்புதல். அது "நம்பும் மேவும் நசையா கும்மே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானுணர்க. கழகம் - கல்லூரி. இயல் இசை நாடகம் என்னும் மூன்றையும் முத்தமிழென்று சொல்லுதலினுல் கொத்து முத்தமிழென்முர். கொத்து-கூட்டம். மொய்த்த வென்பது மிகுதிப்பாட்டை யுணர்த்தி நின்றது. தனிபுரத்தல்-பிறிது துணை வேண்டாது தானே காத்தல். தேமேவு கடவுட் பொலங்கிரி - தேவர்கள் விரும்பும் தெய்வத் தன்மை பொருந்திய பொன் மலையாகிய மந்தரமலை. பொலங்கிரி மத்துத் திரியத் திரித்து எறிய எனக்கூட்டுக. திரிதல் - இடம் விட்டுப் பெயர்ந்து செல்லுதல். திரித்தெறிதல் - இடம் வலமாகச் சுழற்றல். தெண்டிரைத் தடங்கடல் முகட்டு உதித்த அமுது, பாமேவு மதுரம்பழுத்த அமுது என்க. பழுத்தமுது என்புழி, பெயரெச்சத்தகரம் தொக்கது; 'புகழ்புரிந்தில்' என்புழிப் போல. ஒழுகுஞ்சொல் மழலைச்சொல் அஞ்சொல் எனத் தனித்தனி கூட்டுக. குதலையாகிய மழலை எனப் பண்புத்தொகையாகக் கொள்க. கொங்கையைக் குவடாக உருவகஞ் செய்தமையால் விட்டுணுவைக் கொண்டலாக உருவகஞ் செய்தார்; கொண்டல் படிதல் குவட்டிலாகலின். குவடு - மலை.

3. ஒருபுறத்து மரகத மிமைப்ப வொளிர் மாமேரு அபூதவுவமை. சாய்த்ததென என்பது சாய்த்தென ஈறுதொக்கு நின்றது.

சாய்த்தாலென என்பது சாய்த்தென விகாரப்பட்ட தென்றலுமாம். உலகளக்க நிமிர் என்றது உயர்ச்சியின் மிகுதியை யுணர்த்தியது. மேருமலை தென்றிசைக்கு வடக்கில் நிற்றலின் வடபொருப்பெனப்பட்டது. ஒரு தோளால் வளைத்த என்பது இலேசாக வளைத்ததென்பதைக் குறித்து நின்றது. பிநாகம்-சிவபெருமான் வில்லின் பெயர். பிநாகத்தை யுடையவன் பிநாகி. மேருமலை வாசுகியென்னும் நாணாற் பிணிக்கப்பட்டமையின் பிநாகமென்னுங் காரணப் பெயரையுடையதாயிற்று. பின்னுதல் - பிணித்தல் ; நாகம் - மலை. தீக்கனல் - மிகுதிப் பொருட்கண் வந்த பண்புத்தொகையுமாம். மூத்தலைச் சூலத்தை 'முக்குடுமி அயில்' என்றல் செய்யுள் வழக்கு. வாய்வாள் - சிறந்த ஒளி. வாய் - நுதியுமாம். மழுப்படை வீரன் - மழுவாளியென்னுந் துணையாய் நின்றது. உடலல் - மாறுபடுதல். அற இளைத்தல் - மிக எய்த்தல். உடற்றல் - போர் செய்தல். கிராதன் - வேட்டுவ வடிவங் கொண்ட சிவபெருமான். கூவுகுரல் - விகுதிகெட்டுக் கூக்குரல் என நின்றது. மிக்கொலித்தலென்பது பொருள். உலகத்துப் பயிரை உண்ண எத்தனிக்குங் காளைகளை உண்ணுமற் கட்டி வைப்பவர் பலராக, உலக முழுவதையும் உண்ண உண்டாக்கப்பட்ட காளையை உண்ணுது கட்டுவோர் சிவபெருமான் ஒருவரே என்னும் பொருள் தோன்றக் காளைகட்டுப்ரதாபனென்ருர். புடவியுணச் சமையுங் காளை விட்டுணுமூர்த்தி. சமைதல் - உண்டாக்கப்படுதல். விட்டுணுமூர்த்தி இடபமாகச் சிவபெருமானைத் தாங்கினமையின் இங்ஙனங் கூறினர். இதனுற் சிவபெருமானுடைய அலுப்த சத்தி அனந்த சத்திகளைத் தெரித்தவாறு காண்க. பிரதாபம் - மகாமகிமை. கடுதிருமிடற்றிலிடுதல் - பிறப் பிறப்பின்மையோடு சுதந்தரத்தையும் உணர்த்திற்று. காமாரி என்பது வேண்டுதல் வேண்டாமையோடு திருப்தி யென்னும் வரம்பிலின்பத்தையும் "யோகியாயிருந் துயிர்க்கு யோகத்தைப் புரித"லையும் உணர்த்திற்று. கௌமாரியைப் போல் மோகினிக்கு மணுளனென்பது "போகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரி"வித்தலை யுணர்த்திற்று. "நால்வகைப்பட நண்ணிய சத்தியுள்" மோகினி வடிவங் கொண்ட திருமாலும் ஒரு பரிக்கிரக சத்தியாதலால் மோகினிக்கு மணுளனை என்ருர். என்ருரேனும் கௌமாரிக்கும், மோகினிக்கும் சத்தியென்னுஞ் சொன் மாத்திரையி

னன்றி ஏனைத் தன்மையிற் பேதம் பெரிதாமென்க. சூக்கும வெளி - ஞானகாசம். ஐந்தொழிற் கூத்தாகலின் பரமநடமென்றார். பரமம் - மேல். உடற்பிணிக்கும் உயிர்ப் பிணிக்கும் மருத்துவராகலின் வைத்திய நாதரெனப்பட்டார்.

4. குழையடர்தல் - காதொடுமோதுதல். வடிகணை என்னும் வினைத்தொகையை வடித்த கணையென இறந்த காலத்தால் விரிக்க. வடித்தல் - வசப்படுத்தல். குமிழ் - ஆகுபெயராய் மூக்கை யுணர்த்திற்று. மறிதல் - திரும்புதல். அடர்தல் முதலிய இவை; விழியின் தொழிற் சிறப்புக்கள். நவ்வி - ஆகுபெயராய்த் தையலுகியை யுணர்த்திற்று. கோட்டொடு குவடெறிந்த என்புழி ஒடு உடனிகழ்ச்சியன்றி உம்மைப் பொருளுமாம். கோடு யானைக்கோடு - குவடு-மலை. எறிதல் - வெல்லுதல். அமுத கலசம் - பாற்கலசம். தடம்-உயர்ந்த இடம். குமுதம் - செவ்வாம்பல்; ஆகுபெயராய் வாயை யுணர்த்திற்று. சுவையமுதம் - எயிற்று நீராகிய சுவையையுடைய தேன். வாயைக்குமுதம் என்றதற்கிசைய நீரைத் தேன் என்று உருவகஞ் செய்தாம். அறமறத்தல் - முற்றுமறத்தல். பிறர் குணம் - அடியவரல்லாதார் குணம். தகவு - நீதி, தகுதி, உவமை. சேண் - நெடுந்தூரம். உதவுதல் - சிருட்டித்தல். கை - சாகையாகிய கை. மடநடை - மந்தநடை. கனம் - பெருமை. கள்வி - அடியரல்லார்க்குக் காணப்படாதவள். பூத்தல் - விரிதல். சிதசித்துப் பிரபஞ்சம் முழுமையும் அடிமையும் உடைமையுமாகக் கொண்டிருத்தலின் ஒரு செல்வி யென்றார். பாற்றொகும் - இருமங்கினுங் கூடிய. கதுவுதல் - பற்றுதல். செஞ்சுடர் - சிவந்த அக்கினிப் பிழம்பாய் எழுந்த சிவபெருமான். ஒன்று - ஏகவஸ்து. ஒரு மொழியின் - பிரணவத்தால். விண்ட - கூறியருளிய. சூர்ப்பெயர்ப் பகை யெனக் கூட்டுக. பகை ஆகுபெயராய்ப் பகைவனை யுணர்த்திற்று. முதுபழம் - பண்புத் தொகை. அறவெறிதல் - முற்றுங்கெடுத்தல். பகைச் சூர்ப்பெயரை அறவெறிந்து எனக்கூட்டி, பகைவனாகிய சூரபன்மனுடைய பெயரை முழுதும் இல்லையாக்கி (மயில் சேவலென்னும் பெயரை யுண்டாக்கிய) என்றலு மொன்று. முதல் தடிதல் - வேரோடு அழித்தல். பாட்டு - இசைப்பாட்டு. வின்ளுதல் - அலர்தல். தொழும்பு - ஆகுபெயராய்த் தேவரை யுணர்த்திற்று.

போற்றுதல் - அடியார்களைக் காத்தல், அடியார்கள் துதித்தல். வெறு வெளி - வெட்டவெளி. மறை முடிவு - உபநிடதம். நிற்றல் - மந்திர நியாசத்தானன்றித் தானே தயிரில் நெய்போல விளங்கி நிற்றல். நிறை செல்வன் - கடந்த விடத்திலும் பாலில் நெய்போல வியாபித்து மறைந்து நிற்கும் அருட்செல்வத்தை யுடையோன். மழலை வண்டு - இளம் வண்டு. தடமலர் - பெருமையை யுடைய மலர். குடைதல் - கிண்டுதல். தமிழினிசை - தமிழ்போல வினிமை பயக்கும் இசை. இன் - உவமவுருபு. செவ்வழிப்பாட்டு - செவ் வழிப் பண்ணோடு பாடும் பாட்டு. விபஞ்சி - யாழ். மதங்கர் - பாணர். தெருமால் - மனஞ் சுழலுதல். மலரிலஞ்சி - மலரையுடைய தடாகம்.

5. கடாமுமிழ் கராசலம், கைக்கராசலம், கோட்டுக்கராசல மென்க. ஒரு - ஒப்பற்ற. கராசலம் - கயாசுரன் கொண்ட யானை வடிவம். கஞ்சுகத்தை யுடையவன் கஞ்சுகி; சிவபெருமான். கஞ் சுகம் - போர்வை. தந்தை யானைத்தோலைப் போர்த்தமைக்கேற்பத் தனயர் முகபடாமணிந்தனரென்க. பசுவினைப் பாலினைக் கறந்தா னென்புழிப்போல, தந்தியை, கன்றினைப் போற்றுவாமெனச் செயப்படு பொருள் இரண்டு வந்தன. தீர்த்தர் - பரிசுத்தர். கள் - அசை, பராவருதல் - ஒருசொல்; துதித்தலென்பது பொருள். அடியார் வேண்டியது கொடுத்தலின் கன்றிற்குக் கற்பகம் உவமை யாயிற்று. வடாது - வடக்கு. வடாது பொருப்பினில் துன்று புத் தேள் - பிரமா. அவர் அங்கே மனோவதி நகரத்திலிருப்பர். மனோலய முற்ற மெய்ப்பண்பு-அவருடைய மனவெழுச்சி மனத்தில் ஒடுக்கமுறு தற்குக் காரணமாகிய திருமேனியின் வன்மைத் தன்மை. ஆற்றிய வென்னும் பெயரெச்சம் கந்தன் என்னும் பெயர் கொண்டு முடிந்தது.

6. முத்துப்பிறக்கும் இருபது இடங்களுள் செந்நெல்லு மொன்றாதலின் கதிர்ச்செந்நெல் பனிமுத்திருக்கு மென்றார். கொங்கு- வாசனை. 'கொங்குதேர் வாழ்க்கை' என்புழியும் அது. நறை-தேன். வேத புரி-வைத்தீசுரன் கோயில்; காரணப்பெயர். செங்கால், கருங்கண், பைந் தொடி என்பன முரண்டொடை. ஆய்ப்பைந்தொடியாரெனக் கூட்டுக. சிறுபாடியென்க; பாடி முல்லை நிலத்தூர். கண்ணபிரான் இடைக்குடி

யிற் பிறந்தமையின் அதனைப் பெருங்குடி யென்றார். தாதைகட்டுண்டல் தம்பெருமைக்கிழுக்காகலின் அது நிகழாவண்ணம் பால் தயிர் நெய் தேன் இவற்றைத் தனயர் கடலாகப் படைத்தமை கூறப்பட்டது. அங்காத்தல் கிடையாத பொருள் கிடைத்த பொழுது அதனையுண்ண விரும்பி வாயைத் திறத்தல். அகிலம் - எல்லாம், உலகம். தாகத்திற்கு நின்றுண்ணக்கூடிய பதார்த்தங்களே யன்றிப் பசிக்கு இருந்துண்ணக்கூடிய அகிலமும் படைத்த பெருமானென்க. இதனால் விட்டுணு பூமியை யுண்டமை விளக்கினார். ஏறுதல் - அதிகப்படல், இவர்தல். அன்னம் - சோறு, அன்னப்பட்சி. பிதாவுண்ண மண்ணைப் படைத்துத் தாமுண்ண அன்னத்தைப் படைத்த பெருமானெனப் பிறிதுமோர் பொருள் தொனித்தல் காண்க.

7. கான் - சாதியடை; என்னை? கற்பக மலர் பொன் மலராகலின். இக்கருத்துப்பற்றியே 'சொல்வன்மை யின்றெனினென்னு மஃதுண்டேற் - பொன்மலர் நாற்றமுடைத்து' என்றார் நீதிநெறி விளக்கத்தினும். காணி - முன்னையது நிலம்; பின்னையது உரிமை. நாறுதல் - தோற்றுதல். வாய்த்தல் - பிறத்தல்; இது உபசாரம். மால் - இந்திரன்; மாமடிகளென்றும் பாடம். மாமடி - மாமன்; கள் அசை. பால் - இளங்கதிர் நெல்லில் பால்போலிருக்குஞ் சத்து. குதட்டல் - மெல்லுதல். மடுமடி - பால் நிறைந்த மடி. மடுத்தல் - நிறைத்தல். சீர்த்தி - மிகுபுகழ். சீர்த்தியாகிய பிரதாபமென்க. தினகரபுரி - காரணப்பெயர். தினகரன் - சூரியன். தேவதேவன் - முத்துக்குமாரரோடு சிவபிரானுக்கு வேற்றுமையின்மை தெரிப்பார் சிவநாமத்தால் தேவதேவ னென்றார். சிவபெருமானை வேதம் தேவதேவனென்னுந் திருநாமத்தால் போற்றுதலை,

"தேவதேவன் மாதேவன் சிறப்புடை யீச னெங்கோன்
மூவரின் முதல்வ னேகன் முடிவிற்கு முடிவாய் நின்றோன்
ஆவியு ளாவி யானே னந்தண னாதி யென்றே
ஏவரை யிசைத்த வம்மா வெல்லையின் மறைக ளெல்லாம்"

என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத்தானும் உணர்க.

8. 'சூறியதன் கீழாக் குறுகலும்' என்பது இலக்கணமாகலின் நறுவிரியென்பது நறவிரி யென்றுயது. நறு - தேன். வனத் துழாய் - புனற்றுளசியுமாம். வனம்-புனல். "வனத்துச் செல்லுமீன்" என்புழியும் வனம் அது. வனம் அழகுமாம். காடு மிகுதிப் பொருட்கண் வந்தது. மாயிருள் - ஆகாரவீறு சிறுபான்மை யகர உடம்படுமெய்பெற்று வந்தது; இதனை "மாயிருஞாலம் மறுவின்றி விளங்க" என்பதனுலுமறிக. திருமாளிகை - திருமால் மார்பு. திறந்தளித்தல் - ஒருசொல்விழுக்காடு. கௌத்துவ மணியி னொளியைச் சூரியனொளியெனக் கருதிக் கமலந் தானே மலர, கௌத்துவம் மலர்த்தியதென்பது உபசாரம். காரண காரியவொற் றுமைபற்றி அங்ஙனம் கூறியதெனினும் அமையும். காதன்மை - நட்பு. மீனிறப் புணரி - நிலத்தியல்பாற் கருமையாய்த் தோன்றி னும் இயற்கை வெண்மையே என்பார் மீனிறப்புணரி யென்றுர். மீன் - நட்சத்திரம். ஓடு - உடனிகழ்ச்சி. தானையோடு அவுணக் கருங்கங்குல் விடிய என்க. அவுணரைக் கங்குல் என்றதற்கியைய விடிய என்றுரேனும் இறக்கவென்பது பொருள். அச்சத்தை விளைக்குங் குரலென்பார் கடுங்குரலென்றுர். கடுமை - கொடுமை. குரல்விடுதல் - ஒருசொல். இது உருவகவணி.

9. துறைபட்டமறை - பல மார்க்கங்கள் பொருந்திய வேதம். துறை - மார்க்கம்; சாகைகள் என்றலு மொன்று. அறம்பொரு ளின்பம் வீடாகிய துறையுமாம். மறையவன்பல், தொன்மறைகனிந் தூறும் பல் எனத் தனித்தனிக் கூட்டுக. அன்பன் எனப் பிரித்து அதற்கியையப் பொருள்கோடலும் இழுக்காது. நளினப் பொகுட் டென எமது நல்நெஞ்சங் குடிபுகும் ஞானப்பிராட்டி யென்க. என உவம உருபு. நிறஞ் சிதைவுறுமலும் துகில் நனைப்புறுமலும் நெஞ்சத்திற் குடிபுகுந்தா ளென்க. இக்குற்றங்கள் நிகழாப் பொற்பிடந் தேட வல்லள் என்பார் ஞானப்பிராட்டி யென்றுர். பாற்கடற் பிறந்த தேவாமிர்தம் போலாது கலைக்கடற் பிறந்த ஞானமிர்த மென்பார் சொற்கடற் றெள்ளமுதமென்றுர். சொல் - ஆகுபெயர். ஞானமிர்தமென்பது மேலே ஞானப்பிராட்டி யென்பத னுற்பெற்றும். இரண்டமிர்தும் பிறப்பிடத்தால் வேறுபடினும் நிறத் தாலும் கழிபெருஞ் சுவையோடு உறுதி பயத்தலானும் தம்முள் ஒத்த

பண்புடையனவென்க. சிறை - மதில். அது 'சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்' என்றதனாலும் அறிக. சிறைபட்ட சித்தாமிர்தமென்க. சுதைபட்ட உறை நிலவு எனமாறி வெண்ணிறம் பொருந்திய அமிர்த கிரணமெனப் பொருள் கொள்க. உறை - அமிர்தம், மேன்மை.

10. தெரித்தவள் அபிராமி. சிரித்தவள் மாகேசுவரி. பணித்தவள் கௌமாரி. குனித்தவள் நாராயணி. பெயர்த்தவள் வாராகி. தரித்தவள் இந்திராணி. காத்தினள் - காளி. ஓலிட ஏறு அச்சமர்த்தனென்க. மோது அக் கடு நடையுள தகரென்க. அகரம் உலகறிசுட்டு. துகிற்கொடி முழுமதி குறைமதியாக முகில் தொடுந் தடமதிலென்க. தொடுமதில் - படுசொல்லற்றுப் படுபொருளாய் வந்தது. அறுமுகவேள் பிறிதினியைபு நீக்கிய விசேடணம்.

11. சதம் - நூறு. தளம் - இதழ். தவிசு - ஆகுபெயராய்ச் சத்திய லோகத்தை யுணர்த்திநின்றது. சயனமும் அவ்வாறே வைகுந்தத்தை யுணர்த்திற்று. சத்தி - வேல். ஊதியம் - நன்மை. கொடிகள் ஆகுபெயர். தாதையார் பணி குருக்கள் என்றதனால் சிவகுரு என்னும் திருநாமத்தைக் குறிப்பித்தார். மறைக்கிழவனைத் தலை புடைத்து உலகனைத்தினையு மொக்கப்படைத்தமையை,

"எட்டொ ணாதவக் குடிலையிற் பயனினைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலு மிதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மைய தோவெனாச் செவ்வேள்
குட்டி னானய னான்குமா முடிகளுங் குலுங்க."

"மறைபு ரிந்திடும் சிவனருண் மதலைமா மலர்மேல்
உறைபு ரிந்தவன் வீழ்தரப் பதத்தினா லுதைத்து
நிறைபு ரிந்திடு பரிசன ரைக்கொடே நிகளச்
சிறைபு ரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில்."

"ஒருக ரந்தனிற் கண்டிகை வடம்பரித் தொருதன்
கரத லந்தனிற் குண்டிகை தரித்திரு கரங்கள்
வாத மோடப யந்தரப் பரம்பொருண் மகனோர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்"

என்பனவற்றா லுணர்க.